Registered as a news paper.

பக்கங்கள்*. பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 மார்கழி – 21 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 துல்ஹஃதா 23 (05.01.2005) புதன்கிழமை இதழ்:97

# நிவாரணப் பணிகள் முப்படைகளிடம்; ஜனாதிபதி சந்திரிகா அவசர உத்தரவு!

## புலிகளை ஓரங்கட்ட முயற்சி!

(கொழும்பு)

சுனாமி கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணம் மற்றும் புனர்வாழ்வுப் பணிகள் அனைத்தையும் முப்படைகளினதும் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருமாறு ஜனாதிபதி சந்திரிகா அவசர உத்தரவு பிறப்பித்துள்ளார்.

வடக்கு - கிழக்கில் தமிழ் முஸ்லிம் சிங்களப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ள சூழலில் அவர்களை இப்பணிகளில் இருந்து ஓரங்கட்டுவதற்காகவே இந்த அவசர உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக கருதப்படுகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் விமானங்கள் கண்காணிப்பில் இறங்கின!

(கொழும்பு)

சுனாமி கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட இலங்கையில் உதவிப் பணிகளில் ஈடுபட அனுப்பப்பட்ட பிரிட்டிஷ் படையினர் நேற்று முதன்முதலாக தென்பகுதி கரையோரப்பகுதிகளை வானிலிருந்து பார்வையிட்டு மதிப்பீடு செய்தனர்.

இலங்கைக்கு வந்துசேர்ந்த பிரிட்டிஷ் போர்க்கப்பலான எச்.எம்.எஸ்.சதம் இலிருந்து நேற்றுமாலை புறப்பட்ட. ஹெலிகொப்டர் ஒன்றே

(12 ஆம் பக்கம் பார்க்க)

## உதவிப்பொருட்களை இத்தாலி தமிழ்ச்செல்வனிடம் கையளிப்பு!



(கிளிநொச்சி)

கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட தமிழ்ப்பிரதேசங்களுக்காக இத்தாலி வெளிவிவகார அமைச்சு மருத்துவ உபகரணங்கள், மருந்துப் பொருட்கள் மற்றும் தற்காலிக கூரைவிரிப்பகள் போன்றவற்றை நேற்றையதினம் கிளிநொச்சியில் வைத்து அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனிடம் கையளித்தது.

இந்த கையளிப்பு நிகழ்வில் இத்தாலிய வெளிவிவகார அமைச்சின் உளவளஆலோசகர் ஸ்ரீபன் சனினி, இத்தாலிய பொதுமக்கள் பாதுகாப்பு திணைக்களத்தின் மருத்துவர் அலிசிசான்றோ, கொழும்பிலுள்ள இத்தாலிய தூதுவராலயத்தின் முதலாவது செயலர் மசிசிமோ டர்சினி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த உதவிப்பொருட்களை கையளித்த அவர்கள் கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தமது அனுதாபங்களைத் தெரிவித்தனர்.

இத்தாலிய அரசின் உதவிப் பொருட்களைப் (12 ஆம் பக்கம் பாாக்க)

## சுனாமி அழிவு தந்த சந்தர்ப்பத்தை அமைதிக்குப் பயன்படுத்துங்கள்!


### கொலின் பவல் வேண்டுகோள்

(கொழும்பு)

சுனாமி கடற்கொந்தளிப்பால் ஏற்பட்ட பாரிய பாதிப்புக்கள் இலங்கை மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் நீண்டகாலமாக நிலவிவரும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சந்தர்ப்பத்தைத் தோற்றுவித்துள்ளதாக அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொலின் பவல் தெரிவித்தார்.

சுனாமி கடற்கொந்தளிப்புக் காரணமாக இலங்கை மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள கொலின் பவல் -

இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் இந்தச் சந்தர்ப்பத்தை உரியமுறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நீண்ட காலமாக இலங்கையில் நிலவிவரும் இன முரண்பாட்டைத் தீர்த்துக் கொள்வது தொடர்பாக இருதரப்பும் இதயசுத்தியுடன் கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பம் ஒன்று சுனாமி அலைகளின் தாக்கத்தால் தோன்றியுள்ளது.



தமிழீழ விடுதலைப் புலிகள் இன, மத பேதமின்றி பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் உதவ வேண்டும். இதேசயம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அடிப்படை மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பு அவசியம்.

ஐக்கிய நாடுகள் சபை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## உதவிகளைப் பகிரும் கட்டமைப்பை உருவாக்குமாறு புலிகள் வலியுறுத்து!

### நோர்வேயிடம் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வுப் பணிகளை முன்னெடுப்பதற்கு சர்வதேச உதவிகளை பகிர்ந்தளிக்கக் கூடிய கட்டமைப்புக்களைத் தோற்றுவிப்பது தொடர்பாக அரசாங்கத்துடனும், சர்வதேச சமூகத்துடனும் விரைந்து பேசி முடிவுகளைத் தெரிவிக்குமாறு விடுதலைப்புலிகள் நோர்வே அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளனர்.

கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் செய்த இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ்பிறட்ஸ்கரிடம் தமிழீழவிடுதலைப்புலிகளின் அரசியற்துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் - விடுதலைப் புலிகளின் இந்த நிலைப்பாட்டை தெரியப்படுத்தினார்.

நேற்று பிற்பகல் 1 மணியளவில் இடம்பெற்ற இந்தச்சந்திப்பைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய தமிழ்ச்செல்வன் -

இந்த இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு அவசர மனிதாபிமானப் பணிகளை

(12 ஆம் பக்கம் பார்க்க)



அமெரிக்கக் கடற்படையின் பிளக் ஹொக் ஹெலி ஒன்று காலியில் உதவிப் பொருட்களை தரையிறக்குகின்றது.

## அரசியற்துறை அழைப்பு

(யாழ்ப்பாணம்)

சுனாமி கடல் கொந்தளிப்பினால் சேதமடைந்த கரையோரப் பிரதேசங்களில் சேதமடைந்த கட்டட இடிபாடுகளை அகற்றுவதற்கும் துப்புரவு செய்வதற்கும் தொண்டர்களையும் பொது அமைப்புக்களையும் வருமாறு யாழ் மாவட்ட அரசியற்துறை அழைப்பு விடுத்துள்ள (12 ஆம் பக்கம் பார்க்க)

கடல் கொந்தளிப்பு அனர்த்தத்தால் நிர்க்கதியான எம் மக்களுக்கு உதவுங்கள். நமது ஈழநாடு ஆரம்பித்துள்ள நிவாரண நிதிக்கு வாரி வழங்குங்கள். உங்கள் நிதியுதவிகளை வர்த்தக வங்கி (யாழ்ப்பாணம்) கணக்கு இல. 8060025404 அல்லது மக்கள் வங்கி (காங்கேசன்துறை கிளை) கணக்கு இல. 15897 க்கு அனுப்புங்கள்.

# பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைப்பிற்காக அதிபர்கள், ஆசிரியர்களுக்கான சந்திப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்கள் துயர் துடைப்பு விடயமாக கலந்துரையாடல் ஒன்று பின்வரும் திகதிகளில் வலயரீதியாகவும், கல்விக்கோட்ட ரீதியாகவும் நடைபெறவிருப்பதால் சகல அதிபர்களையும், ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு - மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் கேட்டுள்ளார்.

| காலம் | | இடம் | கலந்துகொள்ள வேண்டப்படுவோர் |
|---|---|---|---|
| 05.01.2005 | மு.ப.10.00 | யா/இராமநாதன் மகளிர் கல்லூரி | வலிகாமம் கல்வி வலய அதிபர்கள் |
| 06.01.2005 | மு.ப.10.00 | யா/நெல்லியடி ம.வி | வடமராட்சி வலய அதிபர்கள், ஆசிரியர்கள் |
| 06.01.2005 | மு.ப.10.00 | யா/திருக்குடும்பக் கன்னியர்மடம் | யாழ் கோட்ட அதிபர்கள்கள், ஆசிரியர்கள் |
| 06.01.2005 | பி.ப.2.00 | யா/இந்து மகளிர் கல்லூரி | நல்லூர் கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் |
| 06.01.2005 | பி.ப.2.00 | யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி | தென்மராட்சிக் கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் |
| 07.01.2005 | மு.ப.9.00 | யா/இராமநாதன் கல்லூரி | உடுவில் கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் |
| 07.01.2005 | மு.ப.11.00 | யா/மல்லாகம் மகா வித்தியாலயம் | தெல்லிப்பளைக் கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் |
| 07.01.2005 | மதியம் 12.00 | யா/நெடுந்தீவு மகா வித்தியாலயம் | நெடுந்தீவுக் கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் |
| 07.01.2005 | பி.ப.1.00 | யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி | சண்டிலிப்பாய் கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் |
| 07.01.2005 | பி.ப.3.00 | யா/வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி | சங்கானைக் கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் |
| 08.01.2005 | மு.ப.10.00 | யா/வேலணை சரஸ்வதி மகா வித்தியாலயம் | வேலணை ஊர்காவற்துறை கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் |

முன்னர் வெளிவந்த பத்திரிகைச் செய்திகளின் சில திகதி மாற்றங்கள் செய்யப்பட்டுள்ள இவ்வறிவித்தலை கவனத்திற்கொண்டு செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# நலன்புரி நிலையங்களுக்கு பாப்பரசரின் பிரதிநிதி விஜயம்

(யாழ்ப்பாணம்)

பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி பேராயர் மரியோ செனாரியோ நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த இவர் யாழ். ஆயரைச் சந்தித்த பின்னர் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று அங்கு நிலைமைகளை நேரில் அவதானித்தார்.

பின்னர் சுனாமி அனர்த்தத்தினால் பாதிககப்பட்டு வடமராட்சி நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் பொதுமக்களைச் சந்தித்தும் கலந்துரையாடினார்.

இங்குள்ள அவலநிலையினை நேரில் சென்று பார்த்து வருமாறு பாப்பரசர் தனக்கு உத்தரவிட்டதையடுத்தே தான் இலங்கைக்கு இது தொடர்பான அறிக்கையை தான உடனடியாக ரோமாபுரியிலுள்ள பாப்பரசருக்கு அறிவிக்கவுள்ளதாகவும் இதனால் உடனடி நிவாரணங்கள் அவரால் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

பேராயர் மரியோ செனாரியோவுடன் யாழ். மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் ஜே.நிககலஸ், நற்கருணை நாதர் சபையைச் சேர்ந்த அருட் தந்தை அலெக்ஸ்சாண்டர் ஆகியோருடன் வடமராட்சியிலுள்ள அனைத்து அருட்தந்தைகளும் விஜயத்தை மேற்கொண்டனர்.

நாளை வன்னி செல்லவுள்ள இவர் அங்கு கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட கரையோரப் பிரதேசங்களைப் பார்வையிடவுள்ளார்.

# உரிமை கோரப்படாத நிலையில் முல்லைத்தீவு வாசியின் சடலம்

சுனாமி கடற் கொந்தளிப்பால் காயமடைந்து கடந்த 27 ஆம் திகதி யாழ். போதனா வைதத்திய சாலையில் மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பெண ஒருவர் கடந்த 31 ஆம் திகதி மரணமடைந்து நான்கு தினங்களுக்கு மேலாகியும் அந்தச் சடலத்தை உறவினர்கள் எவரும் பெற்றுக்கொள்ள முன்வரவில்லை.

முல்லைத்தீவு - வண்ணாங்கேணியைச் சேர்ந்த 50 வயதுடைய எஸ்.வசந்தாதேவி என்பவரே உயிரிழந்தவராவார். உறவினர்கள் எவரும் இந்தச் சடலத்தை இது வரை பொறுப்பேற்காதபடியால் அந்தச் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

எனவே பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள இவரது சடலத்தை உறவினர்களைப் பொறுப்பேற்குமாறு வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

# கடைக்குச் சென்றிருந்த சிறுவர்களைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

கடைக்குச் செல்வதாகக் கூறிச் சென்ற இரு சிறுவர்களைக் காணவில்லையென மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

உரும்பிராய் தெற்கு - செல்வபுரத்தைச் சேர்ந்த குணபாலசிங்கம் வேஸ்குமார் (வயது 10) மற்றும் தனபாலசிங்கம் ஜீவகுமார் (வயது 13) ஆகிய இரு சிறுவர்களுமே காணாமற்போயுள்ளனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் கடைக்குச் செல்வதாகக் கூறிச் சென்றவர்கள் பின்பு வீடு திரும்பவில்லையென்றும் உறவினர், நண்பர்களின் வீடுகளில் தேடியும் இவர்களைக் காணவில்லையெனவும் இவர்களின் பெற்றோரினால் மனித உரிமை அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.


நாதன்ஸ் யாழ்ப்பாணம். (குளிரூட்டப்பட்டது)

இன்று முதல் குதூகல ஆரம்பம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

இலங்கை மண் தாவடியின் மைந்தன்ஜெய் ஆகாஷ், ஸ்ரீதேவிகா, வாணி நடித்த



ராமகிருஷ்ணா

காட்சி நேரம் - 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)


## சிறு விளம்பரம்

### வீடு வாடகைக்கு

சுண்டுக்குளியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்புகளுக்கு 38/1, சோமசுந்தரம் அவன்யு, சுண்டுக்குளி. T.P 222 3853, 222 5964 (1020)

## ஆஞ்சநேயர் ஜெயந்தி

அளவெட்டி தெற்கு நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரதராயணர் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஆஞ்சநேயர் ஜெயந்தி நடைபெறவுள்ளது.

இந்த ஜெயந்தி தினத்தை முன்னிட்டு ஆஞ்சநேய சுவாமிக்கு விசேட அபிசேக ஆராதனைகள் இடம் பெறும். (206)

## அவசர கலந்துரையாடல்

யாழ். பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீட மாணவர்களுக்குமான அவசர கலந்துரையாடல் இன்று காலை 9.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

எனவே, இந்தக் கலந்துரையாடலில் அனைத்துப் பீட மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு மாணவர் ஒன்றியச் செயலாளர் என்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

## ஆன்மீக சொற்பொழிவு

வடபிராந்திய சத்தியசாயி சேவா நிலையம் நடாத்தும் ஆன்மீகச் சொற்பொழிவு இன்று மாலை 4.30 மணியளவில் திருநெல்வேலி சத்திய சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வடபிராந்திய இணைப்புக்குழுத் தலைவர் ஸ்ரீ.இ. வசந்தசேனன் அறிமுகவுரை நிகழ்த்துவார்.

சாயி அறக் கட்டளை நிதியத்தின் தலைவர் ஸ்ரீ.டி.ஈஸ்வரன், 'பகவான் ஸ்ரீசத்தியசாயிபாபா ஓர் அவதாரமா' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றவுள்ளார்.


நிறஞ்சனாஸ் சங்கானை

அஜித் [இருவேடம்] பூஜா நடித்த

அட்டகாசம் (ரீல்ஸ்)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

AIRFORCE I

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.

விஜயகாந், லயா, சீதா, சரத்பாபு, ராதாரவி நடித்த

கஜேந்திரா (ரீல்ஸ்)

புதிய நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான அர்ஜுன் (இருவேடம்), சாயாசிங், லைலா, வடிவேல் நடித்த



ஜெய் சூர்யா

கா.நே 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)


# சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிரமதானப் பணிகள் நேற்று ஆரம்பம்

(வடமராட்சி)

சுனாமி கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கரையோரப்பகுதிகளைத் துப்புரவு செய்யும் பணி நேற்று ஆரம்பமாகியது.

வடமராட்சி அரசியற்துறை, யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் அந்தப் பிரதேச இளைஞர்கள் ஆகியோர் துப்புரவுப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

சுனாமி கடற் கொந்தளிப்பால் தொண்டமனாறு முதல் கற்கோவளப் பகுதி வரையான கரையோரப் பிரதேசங்களில் அமைந்திருந்த கட்டடங்கள், கடற்தொழில் உபகரணங்கள் என்பன சேதமடைந்து அந்தப் பகுதியில் பரவிக் காணப்படுகின்றன. அவற்றை அகற்றும் பணி நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தப் பகுதிகளிலுள்ள அசுத்தமடைந்த கிணறுகளுக்கு சுகாதாரப் பரிசோதகர்கள் குளோரின் இடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். (12)

# பொதுக்கூட்டம் ஒத்திவைப்பு

அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை நடாத்தவிருந்த பொதுக்கூட்த்தினை ஒத்திவைத்துள்ளதாக சங்கத்தின் செயலாளர் சோ.உலகேஸ்வரமூர்த்தி தெரிவித்தார்.

சுனாமி கடற் கொந்தளிப்பால் சங்க உறுப்பினர்கள் உடமைகளை இழந்து தொழிலில் ஈடுபடமுடியாது இருப்பதனாலும் மற்றும் இடம்பெயர்ந்தவர்களுக்கான நிவாரணப் பணியில் மேலும் சில உறுப்பினர்கள் ஈடுபட்டு வருதனாலும் இந்தக் கூட்டம் ஒத்திவைக்பட்டதாகத் அவர் தெரிவித்தார்.

## வாழ்வுக்காகவும் இறை பணிக்காகவும் நன்றி செலுத்தும் வழிபாடு

### திருமதி டிலானி ஜெயரஞ்சினி செல்வந்தா
### செல்வன் ஆகாஸ் செல்வந்தா

இயற்கை அனர்த்தத்தினால் இறை ஆறுதலுக்குள் அழைக்கப்பட்ட திருமதி டிலானி ஜெயரஞ்சினி செல்வந்தா, செல்வன் ஆகாஸ் செல்வந்தா ஆகியோரது உலக வாழ்வுக்காகவும் இறை பணிக்காகவும் நன்றி செலுத்தும் வழபாடு இன்று புதன்கிழமை (05.01.2005) மாலை 4.00 மணிக்கு இல 135, கச்சேரி, நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

**அனைவரும் அன்போடு அழைக்கப்படுகிறீர்கள்.**

பெற்றோர்,
சகோதரர்கள்,
குடும்பத்தினர்.

அருட் சகோதரர்
எஸ்.செல்வந்தா
சபை ஊழியன்
தென்னிந்திய திருச்சபை
நீலாவணை, கல்முனை.

## மாமனிதர் குமார் பொன்னம்பலம்

அவர்களது

## 5ம் ஆண்டு நினைவஞ்சலி



மாமனிதர் குமார் பொன்னம்பலம் தமிழ் உலகிற்காய் தனது உயிரைத் தற்கொடையாய் தந்து 5 ஆண்டுகள் நிறைவுறுகின்றன. தமிழீழத் தேசியக் கனவோடு பயணித்த அவரது கனவுகள் இன்று நிறைவேறுகின்ற இந்த வேளையிலே, அன்னாரது நினைவு நாளில் இலட்சிய மனிதனது தியாகத்தை நினைவுகூர்வோமாக.

இன்று (05.01.2005) நடைபெறவிருந்த நினைவு நிகழ்வுகள் நாட்டில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக நடைபெறமாட்டாதென்பதையும் அறியத் தருகிறோம்.

மாமனிதர் குமார் பொன்னம்பலம்
ஞாபகார்த்தக்குழு

## கடலிலிருந்து 100 மீற்றர் பிரதேசம்

# பாதுகாப்பு வலயமாக அரசாங்கம் பிரகடனம்

கடற்கொந்தளிப்பால் முற்றாகச் சேதமடைந்துள்ள கரையோரப் பிரதேசங்களில், கரையிலிருந்து தரைப்பக்கமாக 100 மீற்றருக்குட்பட்ட பிரதேசத்தை உடனடியாகப் பாதுகாப்பு வலயமாக அமைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக உள்ளூராட்சி அதிகாரசபையின் தலைவர் கெமுனு சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கடற்கரையோரப் பிரதேசங்களில் இவ்வாறு அமைக்கப்படும் பாதுகாப்பு வலயத்தினுள் புதிய கட்டடங்களை அமைப்பதற்கோ, அல்லது பழைய கட்டடங்களைத் திருத்தம் செய்வதற்கோ அனுமதி வழங்கப்படமாட்டாது.

தற்போது இந்தப் பகுதியிலுள்ள வீடுகள், ஹோட்டல்கள் மற்றும் பிற கட்டடங்களைத் திருத்துவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. இந்த வலயத்திலிருந்து முற்றாக அழிந்து அல்லது சேதமடைந்த வீடுகளின் குடியிருப்பாளர்களுக்கு உள்நாட்டில் பெற்றுக்கொண்ட காணிகளுக்குள் அவர்களுக்கான வீடமைப்புத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படும்.

இவ்வாறு திட்டங்களை ஆரம்பிக்கும்போது கடற்தொழிலாளர்களுக்கு, இந்தப் பாதுகாப்பு வலயத்திலிருந்து அதிக தூரம் இல்லாத இடங்களில் குடியிருப்புகளை அமைப்பதற்கே தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுனாமி கடற்கொந்தளிப்புக் காரணமாக மீண்டும் ஆபத்துக்கள் நேரிடலாமென்பதால் இந்தப் பாதுகாப்பு வலயத்திலுள்ள கட்டடங்களை நீக்குமாறு அதன் உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்படும். இவற்றை உரிமையாளர்கள் அகற்றாமல்விட்டால் அந்தக் கட்டடங்களுக்கு வந்து செல்கின்றவர்கள் சுனாமி கடற்கொந்தளிப்பில் சிக்க வேண்டி வருமென அவர்களுக்குப் பகிரங்கமாக அறிவிக்கப்படும்.

அத்துடன், கடற்கரையோரப் பகுதிகளிலுள்ள ரயில் பாதைகளிலிருந்து 66 அடி தூர எல்லையில் எந்தவித கட்டடங்கள் அமைப்பதற்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

இந்தத் திட்டம் உடனடியாகச் செயற்படுத்தப்படும். வீதி அபிவிருத்தி அதிகார சபையால் உள்ளூராட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களும் தற்காலிகமாக மீளப்பெறப்பட்டுள்ளன.

கடற்கரையோரப் பகுதிகளில் அழிவுகளுக்குட்பட்ட குடியிருப்பாளர்களுக்கு நாட்டின் உட்புறமாக இடங்கள் வழங்குவதற்கு நடவடிக்கைள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்தக குடியிருப்புக்களை அமைத்துக் கொடுப்பதற்காக நாட்டின் உட்பகுதிகளில் பல இடங்கள் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, சுனாமி தாக்குதலால் கடற்கரைப் பிரதேசங்களில் அழிந்துபோன வீடுகளுக்குப் பதிலாக நாட்டின் உட்பகுதிகளில் கிராமங்கள் பலவற்றை உருவாக்குவதற்கு 20 வெளிநாட்டு அரசசார் பற்ற நிறுவனங்கள் முன்வந்திருப்பதாக சமூக நலன்புரி அமைச்சர் சுமேதா ஜெயசேன தெரிவித்தார்.

இந்தக் கிராமங்களை அமைப்பதற்காக உள்ளூராட்சி அபிவிருத்தி அதிகாரசபை தற்போது திட்டங்களைத் தயாரித்து வருவதாகவும், காணி அமைச்சின் மூலம் காணிகள் பெறப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# எஸ்.பி.திஸநாயக்க மேன்முறையீட்டு மனு!

முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க நாடாளுமன்றத்தில் தமக்குரிய ஆசனம் நீக்கப்படுவதை தடுக்கும், தடை உத்தரவைப் பிறப்பிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

நாடாளுமன்ற செயலாளர் நாயகம், தேர்தல் ஆணையாளர், நுவரெலிய மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டுள்ளனர்.

உயர் நீதிமன்றம் தன்னைத் தண்டிக்கும் அதிகாரம் கொண்டிருக்கவில்லை என்றும், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு, அங்கீகரிக்கப்பட்ட சட்டங்களையும் பிரமாணங்களையும் மீறி உள்ளதென்று திசநாயக்க தெரிவித்தார்.

தமது ஆசனத்தில் மற்றுமொரு பிரதி நிதியைத் தடுக்குமாறு அவர் மேன்முறையீட்டு நீதி மன்றத்தைக் கேட்டுள்ளார்.

# நிவாரண உதவிப் பொருட்களை வடக்கிற்கு அனுப்பியுள்ளோம்!

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

வடபகுதிக்கு நிவாரண உதவிகள் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இரண்டு நாட்களுக்கு முன்னர் வரை நாங்கள் 2 ஆயிரம் மெற்றிக் தொன் எடையுடைய அடிப்படை உணவுப் பொருட்களை வட பகுதிக்கு அனுப்பியுள்ளோம்.

நாங்கள் அனுப்பியுள்ள மருந்துகள், மருத்துவ உபகரணங்கள், மருத்துவர்கள் ஆகியவை இந்தக் கணக்கில் சேர்க்கப்படவில்லை.

ஆனால் இலங்கையின் தெற்குப் பகுதியில் மூன்று மாவட்டங்கள் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

வடக்கே - யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படும் எண்ணிக்கையை விட தெற்கில் 5 அல்லது 6 மடங்கு மக்கள் உயிரிழந்துள்ளனர்.

ஆனால், தெற்குப் பகுதிக்கு நாங்கள் 180 மெற்றிக் தொன் அளவிலான உணவுப் பொருட்களையே அனுப்பியிருக்கிறோம் என்று குறிப்பிட்டார்.





அம்பாறை மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிட்ட மட்டு-அம்பாறை கட்டளைத் தளபதி கேணல் பானு-மீட்பில் ஈடுபட்டுள்ள போராளிகளுடன் கலந்துரையாடுவதை முதலாவது படத்திலும் விசேட அதிரடிப்படை கட்டளை அதிகாரி நிமால் லியூவுடன் கலந்துரையாடுவதை அடுத்த படத்திலும் காணலாம்.

## படையினரும் புலிகளும் இணைந்து

# உதவிப் பணிகள் செய்வது நல்லதொரு அறிகுறியாம்!



## ஹரீம் பீரிஸ் தெரிவிப்பு

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும், இராணுவ அதிகாரிகளும் ஒன்றிணைந்து மேற்கொள்வது நல்லதொரு அறிகுறியென ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரீஸ் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது-

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் கடற்கொந்தளிப்பில் சிக்கி, உயிருக்காகப் போராடும் மக்களுக்கு இராணுவ அதிகாரிகள் தமது இரத்தத்தைக் கூட வழங்கியுள்ளனர்.

இதுபோலவே விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும், அனர்த்தம் நடந்த பிற இடங்களில் இராணுவத்தினரின் உயிர்களைக் காப்பாற்ற உதவிகளைச் செய்துள்ளனர்.

தற்போது விடுதலைப்புலிகளின் பிரதேசங்களில், உயிரிழந்த பொது மக்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கு அரச அதிகாரிகளுக்கு விடுதலைப்புலிகள் உதவிகள் புரிந்து வருவதை நான் கண்ணுற்றேன் எனவும் அவர் தெரிவித்தார்.

கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட இடங்களில் அமைக்கப்பட்டுள்ள 798 நலன்புரி நிலையங்களையும் பார்வையிடுவதற்காக குழுக்களை நிறுவுவதற்கு தேசிய இடர்முகாமைத்துவ நிறுவனத்தின் கவனம் திரும்பியுள்ளதாக, கல்வியமைச்சின் செயலாளர் தாரா டி.மெல் இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள சிறுவர்களைக் கண்டறிவதற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையால் புள்ளி விபரங்களைத் திரட்டும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (தே)

# 2ஆம் உலக யுத்தகால அழிவுகளை சுனாமி பேரழிவு நினைவூட்டியது

## ஹெல்மட்கோல் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் சுனாமியால் ஏற்பட்ட பேரழிவுகள் இரண்டாம் உலக மகாயுத்தத்தில் வீசப்பட்ட குண்டுத் தாக்குதலால் ஏற்பட்ட அழிவுகளைப் போன்றதென ஜேர்மனியின் முன்னாள் அதிபர் ஹெல்மட்கோல் தெரிவித்தார்.

பேர்லினிலிருந்து வெளியாகும் பில்ட் என்ற பத்திரிகைக்கே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது-

யுத்தகாலத்தில் நான் சிறுவனாக இருந்த பொழுது கண்ட அழிவுகள் போன்றே இந்த அழிவுகளுமுள்ளன.

சுனாமி பேரழிவு ஏற்பட்ட அன்று ஞாயிற்றுக்கிழமை நான் காலியிலுள்ள ஹோட்டலின் பல்கனியில் காலை 9 மணியளவில் நின்றுகொண்டிருந்தேன். அந்தவேளை கடலில் மாற்றம் ஏற்படுவதை உணர்ந்தேன். அப்போது புதுமையான சத்தமொன்று கடலிலிருந்து ஏழுந்து, பாரிய அலையொன்று தோன்றியது. மனிதர்கள் கூக்குரலிட்டவாறு ஓடத் தொடங்கினர். இந்தவேளை கடல்நீர் அனைத்தையும் அடித்துச் சென்றது.

கண்ணால் பார்த்துக்கொண்டிருந்த போது கடல் நீரானது வீடுகள் மற்றும் கட்டடங்களை அழித்துச்சென்றது. அதிகாரிகள் எங்களைப் பாதுகாப்பாக அழைத்துச் செல்ல முயல, அதை மறுத்த நாம் மனிதருக்கு உதவ முயற்சித்தோம். ஆனால் நீர், மின் வசதிகள் இல்லாத காரணத்தால் அங்கிருந்து வெளியேறுவதற்கு சம்மதித்தோம் எனத் தெரிவித்தார்

ஹெல் மட்கோல் காலியில் தங்கியிருந்த டல்பே ஹோட்டலின் இரணடாவது மாடிவரை நீர் நிரம்பியதனால், மூன்றாவது மாடியில் இவர் தங்கியிருந்தவேளை, இலங்கை விமானப்படையின் ஹெலிகொப்டர் மூலம் காப்பாற்றப்பட்டு, கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(தே)





சுனாமி பாதிப்புக்குள்ளான இலங்கைக்கு அனுப்பப்படவுள்ள கடற் கப்பலை பாகிஸ்தான் கடற்படையினர் உதவிப் பொருட்களை ஏற்றுவதை முதலாவது படத்திலும், உதவிக்காக அனுப்பப்பட்டதை பாகிஸ்தான் படையினர் விமான நிலையத்திற்கு செல்வதை அடுத்த படத்திலும் காணலாம்.

# அவுஸ்ரேலியா முதல் இனிங்ஸில் 568 ஓட்டங்களைக் குவித்தது



சிட்னியில் நடைபெற்றுவரும் அவுஸ்ரேலிய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டநேரமுடிவில் ரிக்கி பொண்டிங்கின் இரட்டைச் சதத்துடனும், கில்கிறிஸ்டின் சதத்துடனும் அவுஸ்ரேலிய அணி தனது முதல் இனிங்ஸில் 568 ஓட்டங்களைக் குவித்துள்ளது.

இரண்டாம் நாள் ஆட்ட நேரமுடிவில் அவுஸ்ரேலிய அணி 4விக்கெட் இழப்பிற்கு 340 ஓட்டங்களைக் குவித்திருந்தது. இதில் பொண்டிங் 155 ஓட்டங்களையும், கில்கிறிஸ்ட் 23 ஓட்டங்களையும் பெற்ற நிலையில் இருந்தனர். இந்த நிலையில் மூன்றாம் நாள் ஆட்டம் தொடங்குவது மழையால் சில மணிநேரம் தாமதப்பட்டது. இதன் பின்னர் இருவரும் தமது ஆட்டத்தை தொடர்ந்தனர்.

இவர்கள் இருவரது ஆட்டத்திலும் அனல் பறந்தது. இருவரும் ஐந்தாவது விக்கெட் இணைப்பாட்டமாக 153 ஓட்டங்களைப் பெற்றனர். இந்தநிலையில் அணி 471 ஓட்டங்களைப் பெற்றநிலையில் கில்கிறிஸ்ட் 120 பந்துகளில் 5 சிக்ஸர், 14 பவுண்டரிகளுடன் 113 ஓட்டங்கள் எடுத்தநிலையில் டனேஸ் கனேரியாவின் பந்துவீச்சில் விக்கெட் கீப்பர் கம்ரன் அக்மலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதனைத் தொடர்ந்து கப்டன் ரிக்கி பொண்டிங்குடன் வட்சன் இணைந்தார். இந்தவேளை தனது இரட்டைச் சதத்தைப் பூர்த்திசெய்த பொண்டிங் 332 பந்துகளில் 30 பவுண்டரிகளுடன் 207 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் நவீட் உல் ஹசனின் பந்தில் போல்டானார். பொண்டிங் இதனுடன் சேர்த்து நான்கு இரட்டைச் சதங்களைப் பெற்றுள்ளார்.

இதன் பின்னர் வட்சன் 31 ஓட்டங்களுடன் கனேரியாவின் பந்துவீச்சிலும், ஜிலெஸ்பி



ஓட்டமெதுவும் பெறாமல் நவீட் உல்ஹசனின் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யூ முறையிலும், மக்ரா 9, வோன் 16 ஓட்டங்களுடன் கனேரியாவின் பந்துவீச்சிலும் ஆட்டமிழந்தனர். மெக்



கில் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்து வீச்சில் டனேஸ் கனேரியா 7 விக்கெட்டுக்களையும், நவீட் உல்ஹசன் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இதனைத் தொடர்ந்து தனது இரண்டாவது இனிங்ஸை சிறப்பாக சல்மான் பட் மற்றும் யாசிர்ஹமீட் இருவரும் ஆரம்பித்தனர். இவர்கள் இருவரும் 9 ஓவர்களில் 46 ஓட்டங்களைக் குவித்தனர்.

ஆனாலும், பந்து வீச்சில் மாற்றம் செய்யப்பட்டு சுழற்பந்துவீச்சாளர் மெக்கில் வீசிய வைட் போலை சல்மான் பட் அடிக்க முற்பட்ட வேளை அது துடுப்பு மட்டையில் பட்டு ஷேன் வோனிடம் பிடியாக மாறியது. இதனால் 27 பந்துகளில் 3 பவுண்டரிகளுடன் 21 ஓட்டங்களைப் பெற்று சல்மான் பட் ஆட்டமிழந்தார்.

தற்போது யாசிர் ஹமீட் 45 பந்துகளில் 6 பவுண்டரிகள் உட்பட 40 ஓட்டங்களுடனும் யுனுஸ்கான் 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

## இங்கிலாந்து வீரர் வோகன் பயிற்சியின்போது காயமுற்றார்



(கேப்டவுன்)

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் தலைவர் மைக்கல் வோகன் பயிற்சியின்போது காயமடைந்தார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவுடன் டெஸ்ட் போட்டியில் மோதி வருகிறது. முதல் டெஸ்ட் போட்டியில் கிடைத்த வெற்றியுடன் 1-0 என்ற ரீதியில் முன்னணி பெற்றிருக்கும் இங்கிலாந்து அணி தற்போது 3ஆவது டெஸ்ட்டில் ஆடிவருகிறது.

நேற்றுமுன்தினம் 2ஆவது நாள் ஆட்டம் தொடங்குவதற்கு முன்பாக வீரர்கள் பயிற்சி மேற்கொண்டனர். அப்போது வோகனின் இடது கையில் காயம் ஏற்பட்டது.

உடனடியாக அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அவரது கையில் எக்ஸ்ரே பரிசோதனை நடத்தப்பட்டது. இதில் அவரது கையில் லேசான எலும்புமுறிவு ஏற்பட்டுள்ளது கண்டு பிடிக்கப்பட்டது. இதனால் இவர் நேற்றுமுன் தினம் விளையாடவில்லை.

## ஆசிய கிரிக்கெட் அணிக்கு கங்கூலி கப்டனாக தெரிவு!

(கொல்கத்தா)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி உதவி செய்யும் வகையில் ஐ.சி.சி. சார்பில் கிரிக்கெட் போட்டி நடத்தப்படவுள்ளது.

முதல் ஒரு நாள் போட்டி எதிர்வரும் 10ஆம் திகதி மெல்பேர்ன் மைதானத்தில் நடைபெறவுள்ளது. ஐ.சி.சி லெவன் மற்றும் ஆசிய லெவன் அணிகள் இந்தப் போட்டியில் பலப் பரீட்சை நடத்த இருக்கின்றன.

இந்தப் போட்டிக்கான ஆசிய லெவன் கிரிக்கெட் அணிக்கு சௌரவ் கங்கூலி கப்டனாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்தியா, பாகிஸ்தான், இலங்கை மற்றும் பங்களாதேஷ் கிரிக்கெட் சங்கங்களின் தேர்வுக்குழுத் தலைவர்கள் ஆசிய அணிக்கான வீரர்களை அறிவித்தனர்.

இதன்படி சௌரவ் கங்கூலி (கப்டன்), சனத் ஜெயசூர்யா, அத்தப்பத்து, ஷேவாக், ராவிட், யுகானா, கபாலி, சங்கஹார, சமிந்த வாஸ், அக்தர், சகீர்கான், அனில் கும்ளே, முத்தையா முரளிதரன், சச்சின் டெண்டுல்கர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தான் கப்டன் இன்ஸமாம், இந்தியாவின் லக்ஸ்மன் அகியோர்களுக்கு அணியில் வாய்ப்பு கிடைக்கவில்லை. இன்ஸமாம் காயம் காரணமாக அவதிப்பட்டு வருவதால் அவரின் பெயர் பரிசீலிக்கப்படவில்லை.

2 ஆவது மோதல் ஆசிய கண்டத்தில் நடக்கவுள்ளது. இந்தப்போட்டி நடக்கும் திகதி இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

இதேவேளை மெல்பேர்னில் நடைபெறவுள்ள முதல் போட்டிக்கான 20 ஆயிரம் ரிக்கெட்டுக்கள் ஏற்கனவே விற்கப்பட்டுவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் 80 ஆயிரம் ரிக்கெட்டுக்கள் விற்கப்படும் என்று நம்புவதாக அதிகாரிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

## இலங்கை அணியின் வீரர்கள் சேத பகுதியை பார்வையிட்டனர்!

(கொழும்பு)

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட காலி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளையும், இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் பார்வையிட்டனர்.

நியூஸிலாந்து சுற்றுப்பயணத்தை கைவிட்டு நாடுதிரும்பிய அத்தப்பத்து, ஜெயசூரிய, ஜயந்த, வாஸ், டில்ஹார பெர்னாண்டோ ஆகியோர் சேதமுற்ற பகுதியை நேற்றுமுன்தினம் பார்வையிட்டனர்.

## பங்களாதேஷ் அணியில் இனாமுல் ஹக்கிற்கு இடம்

(டாக்கா)

சிம்பாப்வே அணிக்கு எதிரான கிரிக்கெட் டெஸ்ட் தொடரில் விளையாட பங்களாதேஷ் அணியில் மீண்டும் இனாமுல் ஹக் (18) சேர்க்கப்பட்டுள்ளார்.

இடதுகை சுழற்பந்துவீச்சாளரான இனாமுல், இந்தியாவுக்கு எதிரான தொடரில் விளையாடவில்லை. கடைசியாக நியூஸிலாந்துடன் விளையாடினார்.

இந்தநிலையில் வரும் வியாழக்கிழமை சிட்டகொங்கில் தொடங்கவுள்ள டெஸ்டில் இனாமுல் ஹக் விளையாடும் வாய்ப்பைப் பெற்றுள்ளார்.

## கிளார்க்கை ஏசியதால் கனேரியாவுக்கு அபராதம்!



அவுஸ்ரேலியாவுடனான மூன்றாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் தகாத வார்த்தைகளைப் பேசியதாக பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் கனேரியாவுக்கு ரூபா 10 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது டெஸ்டில் அவருக்கு வழங்கப்படும் ஊதியம் இதுவாகும்.

கனேரியா வீசிய பந்தில் கிளார்க் ஆட்டமிழந்தார். இதையடுத்து அவர் வெளியேறும் போது தகாத வார்த்தைகளை கனேரியா பயன்படுத்தினார்.

அவரது நடத்தை குறித்து, ஆட்டம் முடிவுக்கு வந்தபின்பு நடுவர்கள், போட்டி நடுவர் ரஞ்சன் மடுகல்லவிடம் புகார் செய்தனர்.

இதையடுத்து கனேரியா கடுமையாகக் கண்டிக்கப்பட்டார். மேலும் இந்த ஆட்டத்தில் அவருக்குக் கிடைக்கும் வருமானம் முழுவதையும் அபராதமாகக் செலுத்தவேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டது.

# தென்னாபிரிக்காவுடனான மூன்றாவது டெஸ்ட் 163 ஓட்டங்களுக்குள் சுருண்டது இங்கிலாந்து



தென்னாபிரிக்க - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் கேப்ரவுனில் நடைபெற்றுவரும் மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி தனது முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முன்னதாக முதல்நாள் ஆட்டநேரமுடிவில் தென்னாபிரிக்க அணி தனது முதல் இனிங்ஸில் 4 விக்கெட்டுக்களை இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் கலிஸ் 81 ஓட்டங்களையும், அம்லா 21 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்த நிலையில் இரண்டாம் நாள் ஆட்டத்தை இவர்கள் இருவரும் தொடர்ந்தனர். இதில் 25 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் அம்லா, ஹொகாட்டின் பந்துவீச்சில் எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். இதன் பின்னர் டி-வில்லியர்ஸ் கலிஸுடன் இணைந்தார். இவரும் 21 ஓட்டங்களுடன் ஜைல்சின் பந்தில் ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து பொலக் 4, கலிஸ் 149, நிக்கி போஜே 76, என்ரினி ஓட்டமெதனையும் பெறாமலேயே பிளின்ரொப்பின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர். இறுதியில் தென்னாபிரிக்க அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 441 ஓட்டங்களைக் குவித்தது.

இதனையடுத்து தனது முதல் இனிங்ஸை இங்கிலாந்து அணி ஆரம்பித்தது. இதில் ட்ரெஸ் கொதிக், ஸ்ரரஸ் இருவரும் களமிறங்கினர். இவர்கள் தமது இணைப்பாட்டமாக 52 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் என்ரினியின் பந்து வீச்சில் 28 ஓட்டங்களைப் பெற்றிருந்த ட்ரெஸ்



கொதிக் ஆட்டமிழந்தார். இதனையடுத்து கீ வந்தார். அவர் ஓட்டமெதனையும் பெறாமல் பொலக்கின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

இதன்பின் வோகன் வந்தார். அவர் 11 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் அவரது விக்கெட்டை லாங்வெல்ட் கைப்பற்றினார்.



அடுத்து ஸ்ரரஸ் 45 ஓட்டங்கள் பெற்றிருக்கையில் என்ரினியின் பந்தில் போல்டானார்.

இதன்பின்னர் வந்த எவரும் நிலைத்து நின்று ஆடுவதற்கு தென்னாபிரிக்க பந்து வீச்சாளர்கள் அனுமதிக்கவில்லை. இந்த நிலையில் இங்கிலாந்து அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 163 ஓட்டங்களையே பெற்றது. பந்துவீச்சில் லாங்வெல்ட் 5, என்ரினி 4, பொலக் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இங்கிலாந்து பலோ-ஒன் நிலையில் இருந்த போதும் அதனை வழங்காத தென்னாபிரிக்க அணி தொடர்ந்து தனது இரண்டாவது இனிங்சை விளையாடி வருகிறது. இதில் 2 விக்கெட்டுக்களை அவ்வணி இழந்தநிலையில் 100 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இதில் சிமித் 2, கிப்ஸ் 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தநிலையில் ரூடொல்ப் 23, கலிஸ் 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

பந்துவீச்சில் ஹொகாட் மற்றும் பிளின்ரொப் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டை கைப்பற்றியுள்ளனர்.

ii) எந்த நோயும் குணப்படுத்தக் கூடியதன்று.
iii) சில நோய்கள் குணப்படுத்தக் கூடியவை.

6. அ) **முரண்பாட்டுச் சதுரத்தை அடிப்படையாகக் கொண்டு கீழ்வரும் அனுமானங்கள் சரியானவையா பிழையானவையா என்பதைத் தீர்மானிக்குக.**

i) எல்லா காகங்களும் கறுப்பு என்பது உண்மையாக இருந்தால் சில காகங்கள் கறுப்பு அல்ல என்பது பொய்யாகும்.
ii) எந்தக் காகமும் கறுப்பு அல்ல என்பது பொய்யாயின் சில காகங்கள் கறுப்பு என்பது பொய்யாகும்.
iii) எல்லா காகங்களும் கறுப்பு அல்ல என்பது பொய்யாயின் அநேக காகங்கள் கறுப்பு என்பது உண்மை.
iv) சில காகங்கள் கறுப்பு என்பது உண்மையாயின் எந்தக் காகமும் கறுப்பு அல்ல என்று முடிவு செய்ய முடியாது.

ஆ) முரண்பாட்டுச் சதுரத்தை வரைந்து முரண்பாட்டுக்கும் அதற்குரிய உதாரணங்களைத் தந்து விளக்குக.

7. அ) பாரம்பரிய முரண்பாட்டுச் சதுரத்தைப் பயன்படுத்தி இருத்தற் போலியை பற்றி பொருத்தமான உதாரணங்கள் தந்து விளக்குக.

ஆ) கீழ்வரும் அனுமானங்களைச் சரியானவையா? பிழையானவையா? எனக் கூறுக.
i) சில மாணவர்கள் திறமைசாலிகள் என்பது உண்மையாயின் எந்த மாணவனும் திறமைசாலி அல்ல என்பது பொய்.
ii) எல்லா மாணவர்களும் திறமைசாலிகள் என்பது உண்மையாயின் பல மாணவர்கள் திறமைசாலிகள் அல்ல என்பது உண்மை.
iii) எந்த மாணவனும் திறமைசாலி அல்ல என்பது உண்மையாயின் சில மாணவர்கள் திறமைசாலிகள் அல்ல என்பது பிழையாகும்.
iv) சில மாணவர்கள் திறமைசாலிகள் என்பது உண்மையாயின் எல்லா மாணவர்களும் திறமைசாலிகள் என்பது தெளிவு.
v) சில மாணவர்கள் திறமைசாலிகள் அல்ல என்பது பொய்யாயின் ஒரு மாணவனும் திறமைசாலி அல்ல என்பது ஒருவராலும் உறுதி செய்ய முடியாது.

இ) பின்வரும் முரண்பாட்டுத் தொடர்புகளை விளக்குக.
i) மறுதலை முரண்பாடு
ii) உபமறுதலை முரண்பாடு

8. அ) பாரம்பரிய (அரிஸ்ரோட்டலின்) முரண்பாட்டுச் சதுரத்துக்கும் அதுபற்றிய தற்காலத்தய விளக்கத்துக்கும் இடையிலான வேறுபாட்டைத் தருக?

ஆ) பாரம்பரிய முரண்பாட்டுச் சதுரத்தைப் பயன்படுத்தி பின்வருவனவற்றுக்கான விடையைத் தருக.
i) "சில நீதிபதிகள் நல்ல சட்டத்தரணிகள் அல்ல" என்பது பொய்யாயின் பின்வரும் கூற்றுக்களின் உண்மைப் பெறுமானம் யாது?
எல்லா நீதிபதிகளும் நல்ல சட்டத்தரணிகளாவர்.
நீதிபதிகள் எவரும் நல்ல சட்டத்தரணிகள் அல்ல.
சில நீதிபதிகள் நல்ல சட்டத்தரணிகளாவர்.

ii) "சில நண்டுகள் சாதுவான பிராணிகள்" என்பது உண்மையாயின் பின்வரும் கூற்றுக்களின் உண்மைப் பெறுமானம் யாது?
எல்லா நண்டுகளும் சாதுவான பிராணிகள்
நண்டுகள் எவையும் சாதுவான பிராணியல்ல
சில நண்டுகள் சாதுவான பிராணிகள் அல்ல.

9. **பாரம்பரிய எடுப்புச் சதுரத்தைப் பயன்படுத்தி பின்வரும் வாதங்கள் வலிதானவையோ, வலிதற்றவையோ என்பதைத் துணிக.**
i) எல்லா அகராதிகளும் பயனுள்ள நூல்கள். ஆகவே எந்த அகாதியும் பயனுள்ள நூல்கள் அல்ல என்பது பொய்.
ii) சில சிப்பாய்கள் குதிரைகளாவர் என்பது பொய். ஆகவே எல்லா குதிரைகளும் சிப்பாய்கள் என்பது பொய்.
iii) எல்லாச் சிங்கங்களும் மூர்க்கமான பண்பை உடையவை. ஆகவே சில சிங்கங்கள் மூர்க்கமான பண்பை உடையவை.
iv) சில தேனீக்கள் தேசமற்ற பூச்சிகள். ஆகவே எந்தத் தேனீக்களும் தேமற்ற பூச்சிகள் என்பது பொய்.

10. அ) எடுப்பு முரண்பாட்டின் பொருள் என்ன என்பதைத் தெளிவுபடுத்துக.
ஆ) கீழ்வரும் முரண்பாட்டுத் தொடர்புகளை விளக்கி, ஒவ்வொன்றுக்குமான உதாரணங்களைத் தருக.
i) எதிர்மறை
ii) வழிபேற்று முரண்பாடு
இ) உண்மையில் இல்லாதவற்றை உறுதி செய்வது தொடர்பாக பாரம்பரிய முரண்பாட்டுச் சதுரத்தில் எழும் பிரச்சினைகள் எவை?
ஈ) கீழ்வருவ சரியானவையோ, பிழையானவையோ எனக்காட்டுக.
i) A உண்மையாயிருக்கும் போது தொடர்புள்ள I உண்மையாகும்.
ii) A உண்மையாயிருக்கும் போது O பொய்யாகும்.
iii) E பொய்யாயிருக்கும் போது தொடர்புள்ள A பொய்யாகும்.
iv) முக்கோணிகள் மட்டும் தட்டை உருவானது என்றால் தட்டை உருவான யாவும் முக்கோணிகள்.
v) எல்லா முக்கோணிகளும் தட்டை உருவானது அல்ல என்பது உண்மையாயின் எந்த முக்கோணிகளும் தட்டை அல்ல என்பது உண்மையாகும்.

11. அ) எடுப்பு முரண்பாட்டின் பொருள் என்ன என்பதைத் தெளிவாக விளக்குக?
ஆ) பின்வரும் முரண்பாடுகளின் தொடர்புகளை விளக்குக.
i) மாறுதல் முரண்பாடு
ii) உபமறுதலை முரண்பாடு
iii) வழிபேற்று முரண்பாடு
இ) எடுப்பு முரண்பாட்டின் மீது அமைந்துள்ள பின்வரும் அனுமானங்கள் வலிதானவையோ, வலிதற்றவையோ என்பதைக் காட்டுக?
i) சில நூல்கள் விலை கூடியவை ஏனெனில் சில நூல்கள் விலை கூடியவை அல்ல.
ii) எல்லா வர்த்தகரும் மோசடிக்காரர்கள் என்பது உண்மை யல்ல. ஆகவே எந்த ஒரு வர்த்தகரும் மோசடிக்காரர் அல்ல என்பதைத் தீர்மானிக்க முடியாது.
iii) சில மனிதர் நேர்மையானவராயின் எல்லா மனிதரும் நேர்மையானவராயிருக்க இடமுண்டு.
iv) எந்த முதலாளித்துவ வாதியும் தயாளகுணமுள்ளவர்கள் அல்ல என்பதன் பொய்ப்பித்தலிலிருந்து எல்லா முதலாளித்துவ வாதிகளும் தயாளகுணமுள்ளவர்கள் என்பதைத் தீர்மானிக்க முடியாது.
v) சில பழங்கள் இனிப்புள்ளவை என்பதிலிருந்து சில பழங்கள் இனிப்பானவை அல்ல என்பதைப் பெறமுடியாது.

12. அ) பாரம்பரிய முரண்பாட்டுச் சதுரத்தினால் காட்டப்படும் பதார்த்த எடுப்புக்களுக்கிடையிலான தர்க்க ரீதியான தொடர்புகளை விளக்குக.
ஆ) உண்மையான இருப்புக்குரிய எந்த அங்கத்துவரையும் குறிக்காத பதார்த்த எடுப்புக்கள் தொடர்பாக பாரம்பரிய முரண்பாட்டுச் சதுரத்தைப் பயன்படுத்தும் போது எழும் பிரச்சினைகளை விளக்குக?

இங்கே மடிக்கவும்



# மாணவர் மலர்

# ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை - 2005

T. அம்பிகைபாகன் B.Ed Tamil Sp.Trd
ஆசிரிய ஆலோசகர் வேலணை

**பட்டத்துடன் தொடர்புடைய நான்கு சொற்கள் அடங்கிய விடையைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

1.

| | | | |
|---|---|---|---|
| 1. பிரம்பு | - அடி | - ஆசிரியர் | - கல்வி |
| 2. கருப்பு | - சீனி | - இனிக்கும் | - கற்கண்டு |
| 3. புத்தகம் | - இனிப்பு | - காகிதம் | - சக்கை |
| 4. சாறு | - குளிர்மை | - இனிமை | - கொழும்பு |

2.

| | | | |
|---|---|---|---|
| 1. பறக்கும் | - பாடும் | - கரையும் | - இரைச்சி |
| 2. பறவை | - குஞ்சு | - அலகு | - சொல்லும் |
| 3. குருவி | - பறவை | - சிறகு | - பறக்கும் |
| 4. ஆகாயம் | - காற்று | - இரை | - கூடு |

3.

| | | | |
|---|---|---|---|
| 1. தூரம் | - வேகம் | - அசைவு | - வெளிச்சம் |
| 2. இலக்கம் | - சுழற்சி | - கடல் | - உலகம் |
| 3. மணி | - ஓசை | - வானை | - தொடர்பு |
| 4. தொலைவு | - சத்தம் | - தொடர்பு | - இலக்கம் |

**தாமாகும் ஒன்றில் காணக்கூடியவற்றைத் தெரிவு செய்து, புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

1. சிலர் தொலைபேசியில் பேசிக்கொண்டு இருப்பார்கள்.
2. தபால் ஊழியர் கடிதம் எழுதிக் கொண்டிருப்பார்.
3. தபால் ஊழியர் தபாலை தரம் பிரித்துக் கொண்டிருப்பார்.
4. பொது மக்கள் முத்திரை விற்றுக் கொண்டிருப்பார்கள்.
5. காசாளர் காசோலையைப் பெற்றுப் பணம் கொடுப்பார்.
6. காசாளர் காசுக்கட்டளையைப் பெற்றுப் பணம் கொடுப்பார்.

4. ..................................................
5. ..................................................
6. ..................................................

**சரியான விடையின் கீழ் கீறிடுக.**

7. பறவைகளிடம் என்றுமே இல்லாத ஆற்றல்
1) பறப்பது 2) கதைப்பது
3) படிப்பது 4) நடப்பது

8. நாயிடம் எப்பொழுதும் காணக்கூடியது.
1) பற்கள் 2) நன்றியுண்மை
3) வால் 4) குரைத்தல்

9. சிறுவர்கள் கற்கண்டை விரும்பி உண்பதற்குக் காரணம்
1) ஆசை 2) சுவை
3) இரசனை 4) விருப்பு

**பின்வரும் சொற்களுக்கெதிரேயுள்ள இலக்கங்கள் அச்சொல்லைக் குறிக்காட்டாலும், வரிசிறுள் ஏதாவது ஒரு சொல்லைக் குறிக்கிறது. ஆகவே அவற்றை இனங்கண்டு அம்புக்குறி மூலம் தொடர்புபடுத்துக.**

| | | |
|---|---|---|
| 10. | கடல் | 136 |
| 11. | கூதல் | 435 |
| 12. | கடன் | 245 |
| 13. | தடல் | 135 |

**கீழேயுள்ள விபரங்களை வாசித்து இறுதியில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியானதா, பிழையானதா, இல்லாவிட்டால் கூறமுடியாததா என்னும் முடிவைத் துணிந்து அதன் கீழ் கீறிடுக.**

எமது பாடசாலை ஆரம்ப மணி அடிப்பதற்கு மாணவத் தலைவன் அதிபர் காரியாலயம் நோக்கிச் சென்று கொண்டிருந்தான். அதிபர் காலைக் கூட்டத்தில் ஆற்றவேண்டிய உரையைத் தயாரித்துக் கொண்டிருந்தார். மாணவர்கள் வகுப்பறைகளை நோக்கி அவசரமாகச் சென்று கொண்டிருந்தார்கள்.

14. அதிபர் ஆரம்ப மணியை அடித்தார்.
1) சரி 2) பிழை 3) கூறமுடியாது

15. அன்றைய காலைக் கூட்டத்தில் அதிபர் பேசினார்.
1) சரி 2) பிழை 3) கூறமுடியாது

16. பாடசாலை மணி அதிபர் காரியாலயத்திலே உள்ளது.
1) சரி 2) பிழை 3) கூறமுடியாது

17. ஆசிரியர்கள் காலைக் கூட்டத்திற்காக பிரார்த்தனை மண்டபம் நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள்.
1) சரி 2) பிழை 3) கூறமுடியாது

**தரம் 5 இல் கல்வி கற்கும் நான்கு மாணவர்களின் பிறந்த ஆண்டு, மாதம், திகதி கீழே தரப்பட்டுள்ளது.**

| பெயர் | ஆண்டு | மாதம் | திகதி |
|---|---|---|---|
| திலகா | 1989 | தை | 15 |
| பாத்திமா | 1988 | மாசி | 29 |
| டயானா | 1989 | பங்குனி | 30 |
| கீர்த்தனா | 1988 | சித்திரை | 25 |

18. இவர்களில் வயது கூடியவர் யார்?
..................................................


19. இவர்களில் வயது குறைந்தவர் யார்?
..................................................

20. பாத்திமா நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறையே பிறந்தநினத்தைக் கொண்டாடுவாள், காரணம் என்ன?
..................................................


21. பின்வரும் தொடரில் ஒன்று ஏதோவொரு வகையில் அந்தத் தொடரில் பொருந்தாது பொருத்தமற்றது. அதனை இனங்கண்டு அதனைச் சுற்றி வட்டமிடுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) | 33 | 44 | 66 | 88 | 00 |
| 2) | BC | KL | PQ | RT | MN |
| 3) | WIM | MWI | IMW | WLM | MIW |
| 4) | 3 | 6 | 8 | 9 | 12 |
| 5) | கதெ | சசெ | மமெ | பபே | லலே |


**ஒவ்வொரு படவரிசையிலும் வெற்றுக் கூட்டிற்குப் பொருத்தமான படத்தைத் தெரிவு செய்து அதற்குரிய எண்ணைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

22.  (............)

23.  (............)




◎ **இலக்கம் 27-29 வரையிலான வினாக்களிலுள்ள படங்கள் குறிப்பிடும் விடயங்களுக்கேற்ற சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

27. 
1) பயணி ஒருவர் விமானத்திலிருந்து இறங்குகிறார்.
2) யுத்த வீரர் ஒருவர் விமானத்திலிருந்து இறங்குகிறார்.
3) ஒருவர் பராசூட் மூலம் இறங்குகின்றார்.
4) மாணவர் ஒருவர் விளையாடுகின்றார்.

28. 
1) இரையை கெட்டியாகப் பிடிக்க உதவும்.
2) பறக்கும் திசைகளை மாற்ற உதவும்.
3) கம்பீரமான தோற்றத்தை கொடுக்கும்.
4) கூடு அமைக்க உதவும்.

29. 
1) முகத்திற்கு அழகைக் கொடுக்கும்.
2) பார்வைக் குறையைப் போக்கும்.
3) படிப்பறிவு அற்றவர்களும் படிக்கலாம்
4) எல்லா எழுத்துக்களும் பெரிதாகத் தெரியும்.

◎ **பன்வரும் வினாக்களில் முதலில் உள்ள பிரச்சினைகளை விளங்கி, அதற்கேற்ப இரண்டாவதற்கு பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கீறிடவும்.**

30. F (E) ((B)) (R) (U) A (R) Y என்னும் சொல்லில் இருந்து RUBBER எனும் சொல்லை ஆக்கலாமாயின், D (E) C (E) ((M)) (B) (E) ((R)) எனும் சொல்லிலிருந்து ஆக்கக் கூடியது.
1) REMEMBER 2) REED 3) MEMBER

31. அ (வ) (ர்) (க) (ள்) எனும் சொல்லில் இருந்து கள்வர்கள எனும் சொல்லை ஆக்கலாமாயின்.
எ (தி) ர் (ப்) ((பா)) (ல்) எனும் சொல்லில் இருந்து ஆக்கக்கூடியது.
1) பால் 2) பாதிப்பால் 3) எதிர்

32. A பகுதியுடன் தொடர்புடைய Bப் பகுதியுடன் புள்ளிக் கோட்டின் மூலம் தொடர்புபடுத்துக.

| | A பகுதி | B பகுதி |
|---|---|---|
| 1) | காலை | அமாவாசை |
| 2) | தை | சூரியன் |
| 3) | சித்திரை | நீர்நிலை |
| 4) | இரவு | மாரி |
| 5) | தாமரை | புதுவருடம் |

33. ஒரு குடும்பத்தில் தந்தை, தாய், மகள், மகன் எனும் நால்வர் உள்ளனர். அவர்களில் இருவரின் கூட்டு நிறைகள் தரப்பட்டுள் ளன. அவற்றை ஒப்பிட்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்.




1) தாயின் நிறை எவ்வளவு?
.............................................

2) மகனின் நிறை எவ்வளவு?
.............................................

3) மகளின் நிறை எவ்வளவு?
.............................................

4) தாயின் நிறையை மகன் அடைவதற்கு இன்னும் எத்தனை kg கூட வேண்டும்?
.............................................


34. வாக்கியத்தின் முன்னுள்ள சொற்களின் தொடர்பைப் போல் அடுத்துவரும் தொடர்பான சொல்லை அடைப்புக்குள் உள்ளவற்றில் இருந்து தெரிவு செய்து, அதன் கீழ்க் கீறிடுக.

1) பசிக்கு உணவு போல் தாகத்திற்கு
(குளிர்பானம், தேநீர், நீர்)

2) எலிக்கு வளை போல் பாம்புக்கு
(கூரை, புற்று, புதர்)

3) இன்றுக்கு நாளைபோல் மார்கழிக்கு
(தை, கார்த்திகை, மாதம்)

◎ **குறித்த ஒரு சந்தியிலுள்ள தூரம் காட்டி**




35. 1) மரியாள் நகர் வடக்குத் திசையிலுள்ளதாயின், திருவாரூர் எத்திசையிலுள்ளது.
.............................................

2) அக்பர் நகரிலிருந்து மகிந்தபுர வரை செல்ல வேண்டிய வாகனம் இந்தச்சந்தியில் எந்தக் கைப்பக்கம் திரும்புதல் வேண்டும்?
.............................................

36. திருவாரூரிலிருந்து மரியாள் நகர் செல்ல வேண்டிய ஒரு வாகனம் பாதை தெரியாமல் மகிந்தபுர வரை சென்று, திரும்பி இந்தச் சந்திக்கு வந்து மரியாள் நகர் சென்றது.

1) இந்த வாகனம் ஓடிய மொத்தத் தூரம் எவ்வளவு?
(.............................................)

2) வீணாக ஓடிய தூரம் எவ்வளவு?
(.............................................)

3) இந்தச் சந்தியிலிருந்து நீண்ட தூரத்தில் உள்ள நகர் எது?
(.............................................)

இங்கே மடிக்கவும்



# அளவையியலும் விஞ்ஞானமுறையும் I
## எடுப்பு முரண்பாடு

K.T.மோகன் B.A (Hons)

1. **பின்வரும் இடைவெளிகளை உண்மை, பொய், சந்தேகம் என்பவற்றுள் பொருத்தமானதைப் பயன்படுத்தி பூர்த்தி செய்க.**

1. A எடுப்பு உண்மையாக இருக்கும் போது E எடுப்பு ஆக இருக்கும், O எடுப்பு இருக்கும்.
2. E எடுப்பு உண்மையாக இருக்கும் போது I ஆக இருக்கும் O ஆக இருக்கும் போது, A ஆக இருக்கும்.
3. I பொய்யாக இருக்கும் பொழுது A ஆக இருக்கும் E ஆக இருக்கும் O ஆக இருக்கும்.
4. A எடுப்பு மெய் எனின் அதன் மறுதலை ஆகும்.
5. E எடுப்பு உண்மையெனின் அதன் எதிர்மறை ஆகவும், வழிப்பேறு ஆக்வும் இருக்கும்.
6. O எடுப்பு பொய் எனின் உடனனுமானம் ஆகவும் எதிர்மறை ஆகவும் வழிப்பேறு ஆகவும் இருக்கும்.
7. A எடுப்பு பொய் எனின் அதன்மறையின் உபதலை ஆகும்.
8. I எடுப்பு எனின் அதன் எதிர்மறை உண்மை ஆகவும் மறுதலை ஆகவும் வழிப்பேறு ஆகவும் இருக்கும்.
9. E எடுப்பு எனின் அதன் எதிர்மறை உண்மை ஆகவும் மறுதலை ஆகவும் வழிப்பேறு ஆகவும் இருக்கும்.
10. O எடுப்பு உண்மை எனின் அதன் எதிர்மறை வழிப்பேறு ஆகும்.

2. **எடுப்பு முரண்பாட்டிற்கு அமைவாக முதலாவது எடுப்பிற்கு பொருத்தக் கூடிய இரண்டாவது எடுப்பை வெற்றிடத்தில் எழுதுக.**

1. எல்லா மலர்களும் அழகானவை என்பது பொய். எனின் என்பது சந்தேகமாகும்.
2. மாடுகள் புல் தின்னும் என்பது உண்மை. எனின் என்பது உண்மையாகும்.
3. எல்லா மாடுகளும் புல் தின்பவை அல்ல என்பது பொய். எனின் என்பது பொய் ஆகும்.
4. சில காகங்கள் கறுப்பு நிறம் என்பது உண்மை. எனின் என்பது சந்தேகமாகும்.
5. கிளிகள் பச்சை நிறம் அல்ல என்பது உண்மை. எனின் என்பது உண்மையாகும்.

3. அ) A, E, I, O எடுப்புக்களினால் நிகழ்த்தப்படும் பாரம்பரிய எடுப்பு வகையீட்டிற்கிசைவாக உண்மை, பொய், உண்மை என்றோ பொய் என்றோ தீர்மானிக்க முடியாது என்ற மூன்றில் சரியான தைப் பயன்படுத்தி கீழ்வருவனவற்றில் உள்ள இடைவெளிகளை நிரப்புக?.

i) I உண்மை எனத்தரப்படும் போது E ..............., A ..............
ii) E பொய் எனத்தரப்ப்டும் போது A ................ O ..............
iii) A உண்மை எனத்தரப்படும் போது E ...................................
I..........................., O.....................
IV) O உண்மை எனத்தரப்படும் போது E ................................
A ........................, I.......................

ஆ) பாரம்பரிய முரண்பாட்டுச் சதுரத்தின் தொடர்புகளின் படி எடுப்பு ஒன்றின் எழுவாய்ப்பதத்தினால் கூறப்படும் பொருள் இல்லாத போது எழும் பிரச்சினைகளை விளக்குக?

4. **அ)முரண்பாட்டு எடுப்புக்களின் அடிப்படையில் கீழவரும் கூற்றுக் கள் சரியானவையா, பிழையானவையா என்பதைத் தீர்மானிக் குக. உங்களது விடையில் சரி அல்லது பிழை என்ற மாத்திரம் இடவும்.**

1. எதிர்மறையான எடுப்புக்கள் இரண்டும் உண்மையானவையாக இருக்கமுடியும்.
2. சதுரத்தின் மறுதலை எடுப்புக்கள் இரண்டும் உண்மையாக இருக்கமுடியாது என்பதுடன் அவை இரண்டும் பொய்யாகவை யாகவும் இருக்கமுடியாது.
3. வழிப்பேறு எடுப்புக்கள் பண்படிப்படையில் ஒத்தவை அளவு அடிப்படையில் வேறுபட்டவை.
4. உபமறுதலை எடுப்புக்கள் உண்மையானவையாக இருக்க முடியும் எனினும் அவை இரண்டும் பொய்யாவதில்லை.
5. A , E எடுப்புக்களுக்கிடையில் உபமறுதலை முரண்பாடு காணப் படுகையில் I, O எடுப்புக்களுக்கிடையே மறுதலை நிலை காணப்படும் எனக் கூறுவது பொய்யாகும்.

**ஆ)முரண்பாட்டுச் சதுரத்தைப் பயன்படுத்திக் கீழ்வருவனவற்றுக்கு விடை தருக.**

a) சில பறவைகள் பறப்பதில்லை என்பது உண்மையாயிருக்கு மானால் கீழே தரப்பட்டுள்ள எடுப்புக்கள் உண்மைப் பெறுமானம் பற்றித் நீர் தீர்மானிக்கக்கூடிய முடிவு என்ன?

i) எந்தப் பறவையும் பறப்பதில்லை
ii) சில பறவைகள் பறக்கும்
iii) எல்லாப் பறவைகளும் பறக்கும்.

b) எந்த மாணவனும் புத்தி நுட்பம் வாய்ந்தவன் அல்லது என்பது பொய்யாயின் பின்வரும் எடுப்புக்களின் உண்மைப் பெறுமானம் பற்றி நீர் தீர்மானிக்கக்கூடிய முடிவு என்ன?

i) எல்லா மாணவர்களும் புத்திநுட்பம் வாய்ந்தவர்கள்.
ii) சில மாணவர்கள் புத்திநுட்பம் அற்றவர்கள்.
iii) சில மாணவர்கள் புத்திநுட்பம் வாய்ந்தவர்கள்.

5. **அ) எடுப்பு முரண்பாட்டை ஆதாரமாகக் கொண்டு கீழ்வருவனவற் றிற்கு விடைதருக?**

i) என்ன முரண்பாட்டில் உண்மைப் பெறுமானங்கள் பெறப்படும்.
ii) என்ன முரண்பாட்டில் குறைந்தது ஒரு முரண்பாடாவது பொய்யாகும்.
iii) என்ன முரண்பாட்டில் குறைந்தது ஒரு முரண்பாடாவது உண்மையாகும்.

**ஆ) முரண்பாட்டு சதுரத்தை ஆதாரமாகக் கொண்டு கீழ்வருவனவ ற்றிற்கு விடை தருக?**

i) எந்த அன்னமும் வெள்ளையல்ல.
ii) சில அன்னங்கள் வெள்ளையாகும்
iii) சில அன்னங்கள் வெள்ளையல்ல.

**இ) சில நோய்களைக் குணப்படுத்த முடியாது என்பது உண்மையா யின் கீழ்வரும் எடுப்புக்களிலிருந்து நீர் எய்தக்கூடிய உண்மை பொய்மானம் பற்றிய முடிவு என்ன?**

i) எல்லா நோய்களும் குணப்படுத்தக்கூடியவை.

# நிவாரணம் பெறத் தகுதியானவரை தெரிவுசெய்வதற்கான செயற்திட்டம்

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி செயற்திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்ட மக்களின் வருமானம் மற்றும் சொத்துக்கள் பற்றிய விபரங்கள் மதிப்பிடப்படவுள்ளன.

யாழ்.மாவட்ட மக்களின் வருமானம் மற்றும் சொத்து விபரங்களை அறிந்து, அவர்களுக்கான நிவாரணம் உட்பட உதவிக் கொடுப்பனவுகளை மீளாய்வுசெய்யும் நோக்குடன் இந்த மதிப்பீடு இடம்பெறவுள்ளது.

இந்த வருமான மதிப்பீட்டுக்கான பயிற்சிப் பட்டறைகள் யாழ்.மாவட்டத்தின் அனைத்துப் பிரதேச செயலர் பிரிவுகளிலும் உள்ள சகல கிராம அலுவலர்களுக்கும் நடத்தப்பட்டுவருகிறது. சங்கானைப் பிரதேச செயலகத்தில் இவ்வாறான பயிற்சிப்பட்டறை ஒன்று இந்தப் பிரதேச செயலக ஒருதொகுதி கிராம அலுவலர்களுக்கு நடைபெற்று முடிந்துள்ளது. அடுத்த தொகுதி கிராம அலுவலர்களுக்கான பயிற்சிப்பட்டறை ஒன்றும் கடந்தவாரம் நடைபெற்றது.

இந்தப் பயிற்சிப்பட்டறையில் இருந்து கிடைத்த தகவல்களின்படி, ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளிலும் அந்தப் பிரிவு கிராம சேவகர், அந்தப்பிரிவு சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் அந்த ஊரிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கணக்கெடுப்பாளர் ஆகியோர் இந்த மதிப்பீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவர்.

குறிபபிட்ட பிரிவு சமுர்த்தி உத்தியோகத்தரும் கணக்கெடுப்பாளரும் குறிப்பிட்ட கிராமத்தில் உள்ள ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று, அந்தக் குடும்பங்களின் வீட்டின் நிலைமை, வருமான வழிவகைகள், வாகனம் போன்ற சொத்து விபரங்கள், குறிப்பிட்ட குடும்பத்தின் வசிப்பிடம் கண்ணிவெடிப் பிரதேசத்தில் அமைந்துள்ளதா போன்ற சகல விபரங்களும் விசேட படிவம் ஒன்றின்மூலம் தெளிவாகப் பெறப்படும். இவற்றில் இடம்பெயர்ந்தோருக்கு முனனுரிமை வழங்கப்படும் எனவும் தெரியவருகிறது.

இந்த மதிப்பீட்டுப் பணி அடுத்த மாதம் முழுவதும் நடைபெறும் எனவும் தெரியவருகிறது. குறிப்பிட்ட பணி முடிவுற்றதும் விபரங்கள் யாவும் கொழும்பு ` சமுர்த்தி தலைமை அலுவலகத்துக்கு அனுப்பிவைக்கப்படும்.

தலைமைச் செயலகம் குறிப்பிட்ட விபரங்களை ஆய்வுசெய்து, உதவிக் கொடுப்பனவுகள் பெறுவதற்குத் தகுதியானவர்களின் விபரங்கள் அனுப்பிவைக்கப்படும். அந்தப் பட்டியல் விபரம் குறிப்பிட்ட கிராமத்தின் முக்கிய பொது இடங்களில் பார்வைக்கு வைக்கப்படும்.

இநத மீளாய்வுப் பணியின் நோக்கம், தற்போது நிவாரணம் உட்பட உதவிக் கொடுப்பனவுகள் பெறுவோர் பலர் அதற்கான தகுதியற்றவர்கள் ஆவர். அதாவது பலருக்கு இந்த உதவிகள் தேவையற்றவை. அத்துடன் பலர் உதவிக் கொடுப்பனவுகள் தேவைபபடும் தற்போதைய நிலையில் அவற்றைப் பெற முடியாமலும் உள்ளனர். எனவே தேவையற்றவர்களுக்கு உதவிக் கொடுப்பனவுகளை இடைநிறுத்தி, தேவைப்படுவோருக்கு அவற்றை வழங்குவதே இந்தச் செயற்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (207)

## குடும்பப் பெண்ணை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

குடும்பப் பெண் ஒருவர் காணாமற்போயுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பலாலி வீதி திருநெல்வேலியைச் சேர்ந்த ஏ.ரி.சாந்தினிதேவி (வயது 42) எனும் மூன்று பிள்ளைகளின் தாயே காணாமற்போயுள்ளதாக இவரது கணவரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர் கடந்த டிசம்பர் 24 ஆம் திகதி சந்தைக்குப் போவதாகக் கூறிச்சென்றவர் இன்னமும் வீடு திரும்பவில்லையென முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன

(நல்லூர்)

சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு நலன்புரி, நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு நல்லூர் பிரதேச செயலக ஊழியர்களும், கிராம அலுவலர்களும் உணவுப்பொருட்களை வழங்கியுள்ளனர். கரவெட்டி பிரதேச செயலரின் பணிப்புக்கமைய, கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரியில் தங்கியுள்ள மக்களுக்கு இந்தஉணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. (63)

## சிவத்தமிழ்ச்செல்வியின் 80 ஆவது பிறந்ததினம்!

கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 80 ஆவது பிறந்ததின நிகழ்வு - எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு அன்னபூரணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

'சுந்தரர் தேவாரம்', 'வாழ்க எம் அன்னை' ஆகிய முத்துவிழா மலரும் வெளியிடப்படவுள்ளது. சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரத்தை யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் வெளியிட்டு வைப்பார். 'வாழ்க எம் அன்னை' எனும் மலரை கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் வெளியிட்டு வைப்பார்.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக மொறிசியஸ் நாட்டின் இலங்கைத் தூதுவரான தெய்வநாயகம் பிள்ளை ஈஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். இந்த ஆண்டுக்கான அறக்கொடை நிதி - யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கும், தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலைக்கும் வழங்கப்படவுள்ளது. இந்த நிதியை யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட பேராசிரியர் எஸ்.சிவபாலன் கையளிப்பார்.

## அரசாங்க பாடசாலைகள் எதிர்வரும் 10 இல் ஆரம்பம்

(கொழும்பு)

அண்மையில் இடம்பெற்ற கடற்கொந்தளிப்பால் சேதமடைந்த பாடசாலைகள் மற்றும் அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ள பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் முதலாம் தவணைக்காக எதிர்வரும 10 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை க.பொ.த (சாதாரணதர) பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணி மேற்கொள்ளும் பாடசாலைகள் எதிர்வரும் 17 ஆம் திகதி ஆரம்பமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவையாற்ற நாமும் பூரண ஒத்துழைப்பு வழங்குவோம்

### யாழ்.இராணுவ தளபதி சுனில் தென்னக்கோன்

(யாழ்ப்பாணம்)

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சிறப்பாகச் சேவைகளை மேற்கொள்ளவேண்டும். இதற்கு நாம் அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்குவோம். எமது படைவீரர்கள் இயற்கை அனர்த்தம் ஏற்பட்டபோது, தமது உயிரையும் பாராது மக்களுக்கு உதவியுள்ளனர் என யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி சுனில் தென்னக்கோன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் பலாலி இராணுவ வைத்தியசாலையில் பத்திரிகையாளர் மத்தியில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இயற்கை அனர்த்தத்தால் 42 இராணுவத்தினர் பலியாகியதுடன், 283 இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர். இரண்டு இராணுவத்தினர் காணாமற்போயுள்ளனர்.

இயற்கை அனர்த்தம் யாழ். குடாநாட்டில் கரையோரப் பகுதியில் வாழ்ந்த மக்களை அதிகம் பாதித்துள்ளது. குறிப்பாக மணற்காட்டுப் பகுதியில் ஐந்து சிறுவர்களை மீட்ட இராணுவவீரர் - கடற்கரையில் தொடர்ந்தும் தனது பணியில் ஈடுபட்ட சமயம் மரணமடைந்துள்ளார். இவ்வாறான பல சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

## தாயகம் திரும்பியோருக்கு உதவிகள் வழங்கல்!

இந்தியாவில் அகதி முகாம்களிலிருந்து தாயகம் திரும்பிக் கொண்டிருக்கும் மக்களுக்கு உதவுகின்ற "புலம் பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச நிறுவனம்" தற்போது 2004 ஆம் ஆண்டு மீளத் திரும்பியவர்களுக்கு தமது உதவிகளை வழங்கி வருகிறது.

எனவே கடந்த 2004 ஆம் ஆண்டு நாடு திரும்பி, இதுவரை பதிவு செய்யாதவர்கள் இன்று தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு இந்த அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

யு.என.எச்.சி.ஆர் உதவியுடன் விமான மூலமோ அல்லது தாமாகப் படகுகள் மூலமோ மீளத் திரும்பியவர்கள் தங்கள் பகுதி கிராம அலுவலர், பிரதேச செயலர் உறுதிப்படுத்திய கடிதத்துடன் இந்தியாவிலிருந்து மீளத்திரும்பிய திகதியை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களுடன் - 38, கோவில் வீதியில் அமைந்துள்ள ஐ.ஓ.எம். அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

இந்த நிறுவனம் இவர்களுக்கான தொழில்சார் உபகரணங்களை வழங்குவதுடன் தொடர்நதுவரும் 6 மாதங்களுக்கு மாதாந்தம் 1400 ரூபாவை உதவிப்பணமாக வழங்கி வருகிறது. இதேவேளை இந்த நிறுவனம் கடந்த வருடம் யாழ்.மாவட்டத்தில் 12 பிரதேச செயலர் பிரிவுகளைச் சார்ந்த 54 பயனாளிகளுக்கு தொழிலசார் உபகரணங்களை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (55)

## மத்திய சுற்றாடல் அதிகார சபையும் உதவி வழங்க நடவடிக்கை!

சுனாமி இயற்கை அனர்த்தத்தால் யாழ்.மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடனடித் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக நிவாரண உதவிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மத்திய சுற்றாடால் அதிகார சபை யாழ்.உபபிராந்திய அலுவலகம் ஊடாக மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய குறிப்பாக வடமராட்சி கிழக்கு மற்றும் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த உதவிப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

மத்திய சுற்றாடல் அதிகாரசபை வழங்கும் பொருட்களில் குழந்தைகளுக்கான பால்மா, மருந்து வகைகள், ஆடைகள் என்பன அடங்குகின்றன. இந்தப் பொருட்கள் கொழும்பிலிருந்து விமானம் மூலம் பலாலிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஆலோசகர் அஜித்தாடி கொல்தா, மணற்காடுப் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் நிவாரணப் பொருட்களை அனுப்பி வைத்ததுடன், பாதிக்கப்பட்ட மக்களின் இயல்பு வாழ்க்கையை மீளக்கட்டியெழும்புவதற்கான நடவடிக்கைளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நிவாரணப் பணிகளைச் சீராக்க நலன்புரி நிலையங்களை குறைப்பதற்கு நடவடிக்கை

கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு ஆங்காங்கே அமைக்கப்பட்டிருக்கும் சிறிய நலன்புரி நிலையங்களிலுள்ளோரை ஒருங்கிணைத்து, நிவாரணப் பணிகளை முன்னெடுப்பதற்கு வசதியாக பாதிக்கப்பட்ட பிரதேசத்துக்கு மிக அண்மையிலுள்ள பாடசாலைகளை முகாங்களாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் தெரிவித்தனர்.

இதன் முதற்கட்டமாக கரவெட்டி, பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுகளில் இயங்கிவரும் நலன்புரி நிலையங்களிலிருந்து நாகர்கோவில் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட குடும்பங்கள் அனைத்தையும் ஒன்றுதிரட்டிப் புற்றளை மகாவித்தியாலயத்தில் வைத்துப் பராமரிப்பதற்கான ஒழுங்குகளை நாகர்கோவில் கிழக்கு/மேற்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உப சமாசச் செயலாளர்- விடுதலைப் புலிகளுடன் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதன் காரணமாக 170 குடும்பங்கள்வரை ஒன்றுதிரட்டி, புற்றளை மகாவித்தியாலயத்தில் தங்கவைப்பதற்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

மேற்படி குடும்பங்கள் யாவும், தமக்கு வேண்டிய நிவாரண உதவிகளை இனிமேல் புற்றளை மகாவித்தியாலயத்தில் இயங்கும் நலன்புரி நிலையத்திலிருந்தே பெறக்கூடியதாயிருக்குமென நலன்புரி நிலைய உத்தியோகத்தர் விளக்கியுள்ளார்.

இப்போது நிலைகொண்டுள்ள நலன்புரி நிலையங்களிலிருந்து பெறப்பட்ட குடும்ப அட்டைகளை கிராம சேவை அலுவலர், நலன்புரி நிலைய உத்தியோகத்தர் ஆகியோரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பின் அவற்றைத் தம்முடன் எடுத்துச் செல்லவேண்டுமெனப் பணிக்கப்பட்டுள்ளனர்.

இத்தகைய நடைமுறைகள் கடற்கரைப் பிரதேசத்தில் வாழும் சகல மக்களினதும் நன்மைகருதி மேற்கொள்ளப்படவுள்ளன. வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, மணற்காடு போன்ற பிரதேச மக்களுக்கும் தனித்தனி முகாம்கள் அமைக்கப்படவுள்ளன. இதற்கான பாடசாலைகள் சில தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.




புலம் பெயர்ந்தோருக்கான சர்வதேச நிறுவனம் (IOM) அண்மையில் உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பயனாளிகளுக்கு தொழில் சார் உபகரணங்களை வழங்கியிருந்தது. உடுவில் பிரதேச செயலர் - பயனாளி ஒருவருக்கு தொழில்சார் உபகரணங்கள் வழங்குவதையும், அருகில் IOM நிறுவன அதிகாரிகள் நிற்பதையும் படத்தில் காணலாம். (55)

## மோட்டார் சைக்கிள் படையணி மீட்புப் பணியில்

(வடமராட்சி)

கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட சுண்டிக்குளம் முதல் குடாரப்பு வரையான 40 கிலோமீற்றர் நீளமான பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மோட்டார் சைக்கிள் படையணியினர் கடந்த சில நாட்களாகத் தொடர்ந்து மீட்புப் பணியில் ஈடுபட்டுவருகின்றனர்.



வன்னிப் பதிவுகள்

# சுனாமியின் தாக்கத்தினால் தமிழினம் துவண்டுபோய்விடும் என கருதக்கூடாது!

## மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம்

(கிளிநொச்சி)

சுனாமி கடற்கொந்தளிப்பால் தமிழினத்துக்கு ஏற்பட்டுள்ள அழிவு மிக அதிகமானது தான். ஆனால், இந்த இழப்பால் தமிழினம் தனது உரிமைகளுக்கும், விடுதலைக்குமான பயணத்தில் துவண்டுவிடும் எனக் கருதினால், அது அவர்களின் அறியாமையின் வெளிப்பாடாகவே இருக்கும் என தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் தெரிவித்தார்.

நாட்டுப்பற்றாளரும் புலிகளின் குரல் ஒலிப்பதிவு தொழில்நுட்பவியலாளருமான நிக்சன் அல்லது குலசசெல்வனின் வணக்க நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- கடற்கொந்தளிபபால் தமிழினத்துக்கு ஏற்பட்ட அழிவு மிக அதிகமானது. ஆனால், தமிழினம் இந்த அழிவால் துவண்டுபோய் தனது இலட்சியத்திலிருந்து விலகிவிடும் என எவரும் கருதக்கூடாது. அவ்வாறு யாரும் கருதினால், அது அவர்களின் அறியாமையின் வெளிப்பாடாகவே இருக்கும்.

வரலாறு காணாத எமது இனத்தின் இழப்பைப் பயன்படுத்தி, சில சக்திகள் நாம் துவண்டு விடுவோம் எனக் கருதுகின்றன. ஆனால், இழப்புக்களால் உறுதிபெற்றவர்கள் நாம். ஆகவே இந்த இயற்கை அழிவில் உயிரிழந்த நாட்டுப்பற்றாளர் நிக்ஷனின் இழப்பில் நாம் உறுதி பெற்று எழுவோம். எமது விடுதலைப் பயணத்தைத் தொடர்வோம் என மேலும் தெரிவித்தார்.

இந்த வணக்க நிகழ்வு - புலிகளின் குரல் இணைப்பாளர் இராஜேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. பொது ஈகச்சுடரைத் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் ஏற்றிவைக்க, தொடர்ந்து மாவீரர் நாட்டுப்பற்றாளர் குலச்செல்வனின் திருவுருவப் படத்துக்கான ஈகச்சுடரை அவரது உறவினரான பாக்கியநாதன் கொன்ஸ்ரன்ரைன் ஏற்றிவைத்தார். அடுத்து திருவுருவப் படத்துக்கான மலர் மாலையை கிளிநொச்சி செஞ்சிலுவைச்சங்க கணினிக் பயிற்சி ஆசிரியர் புவனேஸ்வரன் அணிவித்தார்.



தொடர்ந்து அகவணக்கம் இடம் பெற்றது. இந்த நிகழ்வின் நினைவுரைகளை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம், புலிகளின் குரல் துணைப் பொறுப்பாளர் செயல்வீரன், காந்தரூபன் அறிவுச் சோலைப் பொறுப்பாளர் புவியரசன், புலிகளின் குரல் பிரதம செய்தியாசிரியர் தவபாலன் மற்றும் புலிகளின் குரல் நிறுவன நிகழ்ச்சி அமைப்பாளர் நா.யோகேந்திரநாதன் ஆகியோர் நிகழ்த்தினர்.

நினைவுக் கவிதைகளை புலிகளின் குரல் நிறுவன நிகழ்ச்சி அமைப்பாளர்களான - ஆதிலட்சுமி சிவகுமார், தென்திரு மற்றும் காந்தரூபன் அறிவுச்சோலை மாணவர்களான திலீபன், மதுசன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் பொறுப்பாளர்கள், போராளிகள், பணியாளர்கள், பொதுமக்கள், காந்தரூபன் அறிவுச் சோலைப் பொ்றுப்பாளர், போராளிகள், பணியாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# மாசார் தமிழ்க்கலவன் வித்தியாலயத்தில் புதிய நலன்புரி நிலையம் திறப்பு!

(பளை)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் மாசார் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில், புதிதாக நலன்புரி நிலையம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

பளை மத்திய கல்லூரியில் 5 ஆயிரத்து 709 மக்கள் தங்கியுள்ளதால், அவர்கள் அனைவரையும் பராமரிப்பதிலுள்ள சிரமங்கள், இடநெருக்கடி, குடிநீர்ப் பிரச்சினை மற்றும் தொற்று நோய்கள் பரவும் அபாயம் கருதி தாளையடி, மருதங்கேணி வடக்கு, மருதங்கேணி தெற்கு, வத்திராயன் வடக்கு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சுமார் 310 குடும்பங்கள் இடம்மாற்றப்பட்டு, மாசார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (21)

# யாழ்.மாவட்ட லயன்ஸ் கழகங்களின் ஒருங்கிணைந்த நிவாரணப் பணி!

யாழ். மாவட்ட லயன்ஸ் கழகத்தால் திரட்டப்பட்ட நிதியிலிருந்து, நலன்புரி முகாம்களில் தங்கியிருப்போருக்கு அரிக்கன் லாம்பு, உடைகள், மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் என்பன வழங்கப்பட்டன.

கம்பர்மலை கலைவாணி சன சமூக நிலையம், கம்பர்மலை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, வல்வெட்டித்துறை, கொற்றாவத்தை, வதிரி ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகள் மற்றும் முகாம்களில் தங்கியுள்ள ஆயிரத்து 450 பேருக்கு அன்றைய மதிய உணவு தயாரிப்பதற்குத் தேவையான பொருட்களும் முகாம் பொறுப்பாளர்களூடாக வழங்கப்பட்டு, சமைத்துப் பரிமாறப்பட்டது.

அத்துடன் கல்வி நடவடிக்கைகள், மருத்துவ முகாம்களூடாக மருத்துவ சேவை வழங்கல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# கடற்கரையோரங்களில் அமைந்துள்ள உப அஞ்சல் அலுவலகங்கள் முற்றாகச்சேதம்

வடமராட்சி கிழக்கில் இடம் பெற்ற சுனாமி கடல் அனர்த்தம் காரணமாக, அஞ்சல் திணைக்களத்துக்கும் பல இலட்சக்கணக்கான ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

கடற்கரையோரங்களில் அமைந்துள்ள சுண்டிக்குளம், தாளையடி, செம்பியன்பற்று, உபஅஞ்சல் அலுவலகங்கள் முற்றாக அழிந்துள்ளன. முள்ளியான் உப அஞ்சல் அலுவலகம் சேதமடைந்துள்ளது.

இந்த உப அஞ்சல் அலுவலகங்களிலுள்ள முத்திரைகள், பணம், மற்றும் பணப்பெறுமதியுள்ள ஆவணங்கள், கோவைகள், தளபாடங்கள் அனைத்தும் முற்றாக கடல் நீரால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

தாளையடி உப அஞ்சல் அலுவலகத்திலிருந்த இரும்புப் பெட்டி வெள்ளத்தால் அடித்துச்செல்லப்பட்டு, 500 மீற்றருக்கு அப்பாலிருந்து மீடகப்பட்டுள்ளது. (21)



கிளிநொச்சியிலிருந்து பரந்தன் நோக்கிச் சென்றுகொண்டிருந்த லொறி, நேற்றுமுன்தினம் வேகக்கட்டுப்பாட்டை இழந்ததால் வீதியை விட்டு விலகி குடைசாய்ந்திருப்பதைக் காணலாம்.

## சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு

# உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ள மக்கள் இறந்தவர்களின் பெயர்களைப் பதிவுசெய்யவும்

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து - பச்சிலைப்பள்ளி, கரைச்சி, கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள இறந்தவர்களின் குடும்பங்களுக்கு மரணச் செலவுக்கான கொடுப்பனவு 10 ஆயிரம் ரூபா கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாண மாவட்ட செயலக உத்தியோகத்தர்களால், பளை மத்திய கல்லூரியில் வைத்து வழங்கப்பட்டன.

தொடர்ந்து கடந்த திங்கள் தொடக்கம் சகல நலன்புரி நிலையங்களுக்கும் சென்று, இறந்தவர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை, வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் கே.ரீ.ஜெயசீலன் மேற்கொண்டுள்ளார்.

இடம்பெயர்ந்து நண்பர்கள் உறவினர்களின் வீடுகளில் வசிக்கும் மக்கள் - தாம் பதிவுகளை மேற்கொண்டுள்ள நலன்புரி நிலையங்களில் இறந்தவர்களின் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளும்படி உதவி அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (21)

## வவுனியா – பாலமோட்டை வீதி படுமோசமாக சேதம்

(வவுனியா)

வவுனியா - பாலமோட்டை நவ்வி பிரதேசத்திற்கான பிரதான வீதி உரியமுறையில் புனரமைக்கப்படாமையால் படுமோசமான நிலையில் சேதமுற்றுக் காணப்படுகின்றது. இதனால் இந்த வீதிப் பாவனையாளர்கள் பெரும் சிரமங்கள் எதிர்நோக்கி வருகின்றனர்.

பாலமோட்டை, நவ்வி, குஞ்சுக்குளம், முன்றுமுறிப்பு ஆகிய பிரதேசங்களுக்குச் செல்லும் புளியங்குளம் - பாலமோட்டை வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாத நிலையில், கடந்த ஆண்டு நடுப்பகுதியில் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. எனினும் புனரமைப்பு பூர்த்தியாகாத நிலையில் புனரமைப்புப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் வாகனங்கள் இந்த வீதியூடாக பயணம் செய்யமுடியாத நிலை காணப்படுகின்றது.

இந்தப் பிரதேச மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதாயின் மல்லாவி நகருக்கே செல்ல வேண்டியுள்ளது. நட்டாங்கண்டல்-பனங்காமம் ஊடாகச் செல்லும் வீதி படுமோசமாகச் சேதமுற்றுக் காணப்படுகிறது.

இதனால் இந்தப் பகுதியில் வாழ்கின்ற 2 ஆயிரத்து 500 இற்கு மேற்பட்ட மக்கள் பெருஞ்சிரமங்களின் மத்தியில் தமது அன்றாடத் தேவைகளை நிறைவேற்றி வருகின்றனர்.

சம்பந்தப்பட்டவர்கள் இதனை கருத்திற்கொண்டு இந்த வீதிகளை புனரமைப்புச் செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தப் பகுதிப் பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### ஜனவரி - 05

**1792:-** தலையில் குல்லாய் வைத்துக்கொண்டு தெருவில் சென்றதன் காரணமாக இந்தியாவில் பொதுமக்களை அனாவசியமாக பீதிக்குள்ளாக்கியதாக ஒருவன் கைது செய்யப்பட்டு இன்று அபராதம் விதிக்கப்பட்டான்.

**1914:-** மோட்டார் கார் உற்பத்தியில் பெரும் புரட்சியினைச் செய்த ஹென்றி ஃபோர்ட், அமெரிக்காவிலுள்ள தனது தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியமாக நாளொன்றுக்கு 5 டொலர் தருவதாகவும், அத்துடன் இலாபத்தில் பங்கும் தருவதாகவும் கூறி, எட்டுமணி நேரம் மட்டுமே தொழில்புரிந்தால் போதும் என்றும் புரட்சிகரமான ஒரு அறிவித்தலை விடுத்தநாள் இதுவாகும்.

**1992:-** பிலிப்பைன்சிலுள்ள தனது கடற்படைத்தளத்தை சிங்கப்பூருக்கு மாற்றுவது தொடர்பான ஒப்பந்தம் ஒன்று இன்று அமெரிக்காவுக்கும் சிங்கப்பூருக்கும் இடையே செய்து கொள்ளப்பட்டது.

**2000:-** சந்திரிகா அரசின் தமிழின அழிப்புக் கொள்கையை சர்வதேசத்துக்கு அம்பலப்படுத்தியவரும், மனித உரிமைவாதியும், சட்டத்தரணியுமான மாமனிதர் குமார் பொன்னம்பலம் சுட்டுக் கொல்லப்பட்ட தினம் இன்றாகும்.

தொகுப்பு - சந்துரு

ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை*
*உண்மையான் உண்டுஇவ் வுலகு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## சந்தேகத்துக்குரிய நிவாரணப் பணியாளர்கள்.....!

ஊடகங்களில் அன்றாடம் வெளிவரும் செய்திகள் யாவும் 'சுனாமி' கடற்கோளால் பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கும், புனர்வாழ்வு நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்குமென உலகெங்கணும் இருந்து நிவாரணப் பொருட்களை ஏற்றிய வண்ணம் - கப்பல்களும், விமானங்களும் தொடர்ந்து வந்துகொண்டிருப்பதைத் தெரிவித்துக்கொண்டிருக்கின்றன.

அதுமட்டுமல்ல நிவாரணப் பணிகளில் ஈடுபடுவதற்கென்று கூறிக்கொண்டு, சர்வதேச வல்லாதிக்கச் சிந்தனைகொண்ட நாடுகள் பலவும் அந்தந்த நாட்டுப் படைகளையும் கொழும்பில் கொண்டுவந்து அதே கப்பல்களிலும் விமானங்களிலும் இறக்கிக்கொண்டும் உள்ளன.

எங்கள் நாட்டின் மீதும், மக்கள் மீதும் இந்த நாடுகள் 'சுனாமி' அனர்த்தம் காரணமாகக் கொண்டுள்ள அளப்பெரிய அக்கறையும், கரிசனையும் வியக்கவும் பிரமிக்கவும் வைக்கவே செய்கிறது.

கடந்த இரண்டு தசாப்தகாலமாக இந்த நாட்டின் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்து அதிகாரம் செலுத்திய பேரினவாதத் தலைமைகள் சிறுபான்மைத் தமிழர்களுக்கு எதிராக மேற்கொண்ட மனித நேயத்திற்கும், மனித உரிமைகளுக்கும் விரோதமான காட்டுமிராண்டித் தனமான நியாயமற்ற யுத்தத்தின் போதும் இதே நாடுகள் - அதாவது இப்போது நிவாரணப் பணிக்கென முண்டியடித்துக்கொண்டு முன்வந்து கொண்டிருக்கும் நாடுகள் சிங்கள அரசுக்கு பெருமளவில் போராயுதங்களையும், இராணுவத் தேவைகளுக்கான ஏனைய உபகரணங்களையும் மட்டுமல்ல, போர்க் கப்பல்களையும் யுத்த விமானங்களையும்கூட நீண்டகாலக் கடன் அடிப்படையிலும், இராணுவ பரஸ்பர உதவிகளின் பேரிலும் தொடர்ந்து மாறிமாறி வழங்கியதுடன் தத்தம் நாட்டுப் படையினரை - இராணுவ நிபுணர்களை அனுப்பி யுத்தத்தைத் தீவிரவாதப்படுத்தும் நோக்கிலான பயிற்சிகளையும், ஆலோசனைகளையும் அள்ளி வழங்கிய புண்ணியவான்களாவர்.

இதன் மூலம் அடக்கு முறைக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் உள்ளான தமிழ் மக்களின் அரசியல் மற்றும் வாழ்வியல் உரிமைகளுக்குமான போராட்டத்தை ஆயுத முனைப்பில் நசுக்க முனைந்த ஜனநாயக விரோத பேரினவாத அரசியல் தலைமைகளுக்கும் பக்கபலமாகி, பல்லாயிரக் கணக்கில் தமிழ் மக்கள் அழிவடையவும் காரணமாகினர்.

இந்தியா, அமெரிக்கா, சீனா, பிரிட்டன், பாகிஸ்தான், இஸ்ரேல் என இப்போது நிவாரணப் பணிகளுக்கு உதவ கப்பல் கப்பலாக அணிவகுக்கும் நாடுகள் - மனித நேயமற்ற யுத்தமொன்றை நீதியற்ற முறையில் மேற்கெண்ட ஜனநாயக விரோத அரசுகளுக்கு எல்லா வகையிலும் உதவியவர்கள் என்பதும் கசப்பான உண்மையே ஆகும்.

இன்று சுனாமி அனர்த்தத்தால் இழப்புகளுக்குள்ளான மக்களுக்கு உதவுவதற்கென போர்க்கப்பல்கள் சகிதம் வந்து சேர்ந்துள்ள இந்தியா தான் - 1987 ஜூலையில் தமிழ் மக்களுக்கு நிவாரணம் வழங்க வானில் இருந்து விமானம் மூலம் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை போட்டு பாசாங்கு காட்டிவிட்டு இலட்சக்கணக்கான இந்தியப் படைகளைக் கப்பல் மூலம் இறக்கி அமைதி காக்கும் படைகள் என அவற்றுக்கு பெயரும் இட்டு மேற்கொண்ட ஆக்கிரமிப்பு மற்றும் அழிவுப் பணிகளை வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் எந்தக் காலத்திலும் மறக்கவே முடியாது.

எனவே போர்க்கப்பல்களில் வரும் நிவாரணப் பணியாளர்கள் என்ற பெயரிலான படையினரையும் அவர்கள் சுமந்து வரும் நிவாரணப் பொருட்களையும் தமிழ் மக்கள் சந்தேகத்துடனும் வெறுப்புடனும் பார்ப்பது அவர்களின் பட்டறிவு அனுபவத்தின் எதிரொலியே ஆகும்.


இன்று சமாதானம் நிலவும் காலத்திலும் இலங்கை அரசு புரிந்துணர்வு உடன்பாட்டின் விதிமுறைகளை மீறும் வகையில் இராணுவச் சமநிலை என்ற நிலைப்பாட்டை உடைக்கும் வகையில் இந்தியா, அமெரிக்கா, சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் தாம் ஆயுதங்களையும் இராணுவத் தளபாடங்களையும் ஏனைய பயிற்சிகளையும் தொடர்ந்து வழங்கி அரசின் போர் முனைப்புக்கு உற்சாகம் ஊட்டி வருவதும் வெளிப்படையான உண்மையேயாகும்.

இந்தச் சூழலில் சுனாமியால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்ளத் தீவிரம் காட்டிவருகின்ற அயல் மற்றும் அந்நிய சக்திகளின் உள நோக்கம் குறித்த அச்சம் வடக்கு - கிழக்கு மக்களுக்கு ஏற்பட்டிருப்பது தவிர்க்க முடியாத ஒன்றே ஆகும்.

போரால் அலைந்துலைந்து அழிவுகளை எதிர்கொண்டு இழப்புக்களைச் சந்தித்து உளவியல் மற்றும் உடலியற்பாதிப்புக்களுக்கு உள்ளான மக்களின் இயல்வு வாழ்வை மீட்டெடுக்க எந்த வகையிலும் உதவ முன்வராத மக்கள் குடியிருப்பை ஆக்கிரமித்து நிற்கும் படைத் தரப்பை உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் இருந்து அகற்ற வக்கற்ற இந்தக் கருணையுள்ளம் கொண்ட (?!) அந்நிய சக்திகள் சுனாமி பேரழிவுக்கு உள்ளாகிய நிராதரவாக நிற்கும் வடக்கு -கிழக்கு மக்களுக்கு நேர்மையாக உதவுவார்களா என்பது சந்தேகம் தான்.

இந்தநாடுகள் தங்கள் மனித நேயத்தை ஜனநாயகப் பண்பை இன்றுவரை எந்தக் கட்டத்திலும் முழுமையாக - நேர்மையாக நிரூபிக்கவே இல்லை என்பதே இதற்கான காரணமாகும்.

## நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை தொடர்ந்தும் ஓரங்கட்டும் ஜனாதிபதி

இயற்கை அனர்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதில் பிரதம மந்திரி மகிந்த ராஜபக்ஷவை அதிபர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஓரங்கட்டி யிருப்பதாக ஆங்கிலவார இதழொன்று முதற்பக்கத்தில் செய்தி வெளியிட்டிருந்தது.

அம்பாந்தோட்டையில் தான் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அங்குதான் உங்களுக்கு அதிகவேலை இருக்கிறதென்றும், அங்கே போய் ஆகவேண்டியதைக் கவனியுங்கள் என்று சொல்லி மகிந்தவை ஜனாதிபதி அனுப்பிவிட்டாராம்.

தமக்குச் சொல்லாமல் மகிந்தா யாழ்ப்பாணம் சென்றதும், அம்மையாருக்குப் பிடிக்கவில்லையாம். அது மட்டுமல்ல இயற்கை அனர்த்தம் நிகழ்ந்த பின் தான நாடு திரும்பும் வரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லையென்பதிலும் அம்மையாருக்குக் கோபமாம்.

இயற்கை அனர்த்தம் ஆட்சி பீடத்துக்குள்ளும் புயலைக் கொண்டு வருமோ?

நிவாரண உதவியில் இப்படியும் ஒரு மோசடி என்று ஒரு செய்தி வெளியாகியிருக்கிறது.

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்குச் சில தொண்டு அமைப்புக்கள் சேவை மனப்பான்மையுடன் அனுப்பும் நிவாரணப் பொருட்களைத் தாங்கள் ஒழுங்கு முறையாக அவர்களுக்குச் சேர்ப்பிப்பதாகக் கூறி, ஜனதா விமுக்தி பெரமுன என்ற மக்கள் முன்னணி வேண்டுகிறதாம். பின்னர், தங்கள் அன்பளிப்பு என்று முத்திரை குத்தி நலன்புரி முகாம்களுக்கு ஜே.வி.பியினரால் அனுப்பிவைக்கப்படுகிறதாம்.

தனிப்பட்ட முறையில் மொறட்டுவைப் பகுதியில் பத்து நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் அகதிகளுக்குக் கொண்டு சென்ற நிவாரணப் பொருட்கள் கொண்ட பார்சல்களை, தாங்கள் சேர்ப்பிப்பதாக வாங்கிய ஜே.வி.பியினர், அவற்றின் மேல் தங்கள் முத்திரைகளைப் பொறித்த பின் தங்கள் அன்பளிப்பு என்று அனுப்பிவைத்தனராம்.

இந்தப் பொருட்களைக் கொண்டு சென்ற வர்த்தகர்கள் இதனால் ஜே.வி.பி மீது ஆத்திரம் கொண்டுள்ளனராம்.

'சுனாமி' அனர்த்தம் நாட்டில் ஏற்படுத்திய பேரழிவைத் தொடர்ந்து, நத்தார் புத்தாண்டு மட்டுமல்ல, கலியாணம் மற்றும் கொண்டாட்டங்கள் அனைத்துமே நிறுத்தப்பட்டுள்ளன. யாருடைய வற்புறுத்தலுமின்றி இந்தக் கொண்டாட்டங்களை சிறுவர் முதல் முதியோர் வரை நிறுத்தி விட்டனர்.

கொண்டாட்டங்களில் செலவிடும் பணத்தைச் சில நிமிடங்களிலிலேயே அநாதைகளாக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்களுக்கு, நிவாரணமளிக்கப் பயன்படுத்த வேண்டுமென்று மதகுருமாரும், தொண்டர் அமைப்புகளும் வேண்டுகோள்விடுத்தனர்.

எவரும் வேண்டுகோள் விடுக்காமலேயே பாதிக்கப்பட்ட மக்களுக்கும், அநியாயமாக உயிர்நீத்த பிஞ்சுக் குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் அஞ்சலி செலுத்துமுகமாக கொண்டாட்டங்களை நிறுத்தினர்.

புலம் பெயர்ந்து வாழும் மக்கள் கூட அங்கு தங்கள் பிறந்த நாள் கொண்டாட்டங்கள், புத்தாண்டுக் கொண்டாட்டங்களையெல்லாம் நிறுத்தி, அந்தச் செலவுக்குரிய பணத்தை இங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வுக்கழகத்தின் மூலம் அனுப்பிவைத்தனர்.

சில ஐரோப்பிய நாடுகளில் வெள்ளையர்கள் கூட புத்தாண்டுக் கொண்டாட்டங்களை நிறுத்தி, இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத்துக்கு உதவுகின்றனர்.

இதே சமயம் கொழும்பில் பெரிய ஆடம்பரமான ஹோட்டலில் கொழும்புப் பிரபலத்தின் மகளுக்குக் கல்யாணம் நடந்ததாம்.

நாடே இயற்கை அழிவைக் கண்டு அழுதுகொண்டிருந்த அந்த நேரத்தில், இந்தக் கல்யாணம் மிக உற்சாகத்துடன் போத்தல்கள், கிளாஸ்களின் சத்தத்தையும் மீறி வைலா நடன இசையின் ஓசைகளின் மத்தியில் சிறப்பாக நடந்ததாம்.

மறு நாள் இந்தக் கல்யாணம் பற்றி அறிந்து கொள்வதற்காக ஒரு ஆங்கிலப் பத்திரிகை நிருபர் ஒருவர் மணமகளின் தாயாரிடம் விசாரித்த போது, அந்தக் கலியாணம் பற்றி பிரசித்தப்படுத்த விரும்பவில்லை என்று சொன்னாராம். தொடர்ந்து மகள் இப்போது இங்கிலாந்தில் இருக்கிறார் என்றும் சொன்னாராம்.

இப்படியும் உலகம் இருக்கின்றது...!

அமெரிக்காவுக்குக் கடும் எதிரி என்று காட்டிக் கொள்பவர்கள், மக்கள் விடுதலை முன்னணி என்ற ஜே.வி.பியினர்.

உலக வங்கி போன்றவற்றின் ஆலோசனை இல்லாமல், வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டதற்குத் தாங்களே காரணம் என்று கூறியவர்கள்.

இப்பொழுது இலங்கையில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தத்தின் அழிவைக் கொண்டு அமெரிக்கா தனது கடற்படையைச் சேர்ந்தவர்களுடன் பெரிய போர்க் கப்பலை இலங்கைக்கு அனுப்பியிருக்கிறதே!

இதற்கு ஜே.வி.பி. எதிர்ப்புத் தெரிவிக்காதது ஏன்?

இந்தப் போர்க் கப்பல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி புரியவா? அல்லது பலமிழந்து நிற்கும் இலங்கையின் படைகளுக்குப் பலம் அளிக்கவா?

ஜே.வி.பியின் மௌனம் சந்தேகத்தைக் கிளப்பவில்லையா?

யார் வந்தாலும், எந்தக் கப்பல் வந்தாலும் எமது மக்கள் ஒற்றுமையாக இருந்தால் அதை மிஞ்சிய பலம் வேறு இருககிறதா?

முல்லைத்தீவுக்குச் சென்று திரும்பிய சில அன்பர்களைச் சந்தித்தேன்.

பேரலைகளின் அனர்த்தத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முல்லைத்தீவு மிகமுக்கியமான பகுதி.

அங்கு கடற்புலிகளின் தளபதி சூசை நேரில்நின்று நிவாரண வேலைகளில் ஈடுபடுகிறார். பல இடங்கள் சுத்தமாக்கப்பட்டுவிட்டன. விரைவில் இடிந்த கட்டடங்களுக்குப் பதிலாக, புதிய புதிய கட்டடங்கள் தோன்றும் என்பதில் ஐயமில்லை.

இப்படி உறுதியாகக் கூறுகிறார்கள்.

# கொபி அனானின் தூதுவர் ஜனாதிபதியைச் சந்திப்பு!

இலங்கைக்கு இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு கொழும்பு வந்த ஐ.நா. செயலர் கொபி அனானின் விசேட தூதுவர் மர்க்றீற்றா வோல்ஸ்ரோம் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி சந்திரிகாவை - ஜனாதிபதி மாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது, இலங்கையில் கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐ.நா.செயலாளர் கொபி அனானின் அனுதாபத்தினை வோல்ஸ்ரோம் ஜனாதிபதியிடம் தெரிவித்தார். அத்துடன் கடற் கொநதளிப்பால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கு ஐ.நா.தனது உதவியினைத் தொடர்ந்து வழங்குமெனவும் அவர் உறுதியளித்தார்.

இந்தச் சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், வெளிவிவகார அமைச்சின் செயலாளர் மற்றும் சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவும் பங்கேற்றிருந்தனர்.

கடற் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் அடிக்கட்டுமானப் பணிகளுக்கான தேவைகள் குறித்து ஆராயபத்துப் பேரடங்கிய ஐ.நா.வின் விசேட குழுவொன்று ஏற்கனவே வந்து நிலைமைகளை ஆராய்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

பகுதி - I

சங்கர்



# காற்றே நீ எம் கதை கேளாயோ...!

# அலையே நீ எம் நிலை உணராயோ...!

**சுனாமி கடற் கொந்தளிப்புப் பேரழிவு அனர்த்தம் வடக்கு – கிழக்கு கரையோர மக்களுக்கு ஏற்படுத்திய தாக்கங்கள், அழிவுகள் பற்றிய நேரடிப் பார்வைப் பதிவுகளதும் அது குறித்த, உணர்வுப் பகிர்வுகளும்....**

மதுரையில் சிவபெருமானுக்கு முதுகில் விழுந்த பிரம்படி உலகின் அனைத்து ஜீவராசிகளுக்கும் பட்டது என்பார்கள். அதேபோல் சுமாதரா கடலில் ஏற்பட்ட பூகம்பத்தின் விளைவால் ஏற்பட்ட "சுனாமி அலை" பெரும்பாலான ஆசியநாடுகளில் எதிரொலித்துள்ளது. உலக வரை படத்தையே மாற்றிய இந்த அனர்த்தம் பற்றிய செய்திகள் தொடர்ந்து வந்த வண்ணமே உள்ளன. இவை மட்டு - அம்பாறை மாவட்டத்தில் ஏற்படுததிய தாக்கம் எத்தகையது? அங்கு மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வுப் பணிகள் எவ்வாறு அமைந்துள்ளன? மேலும் என்னென்ன உதவிகள் தேவைப்படுகின்றன என்பது குறித்து வெளியுலகத்துக்குக் கொண்டுவரும் முயற்சியாக இந்தக் கட்டுரைத் தொடரை ஆரம்பிக்கிறேன். இது முழுவதுமான தகவல் திரட்டியபின் எழுதப்பட்டதல்ல...

காணக் காண அப்படியே தருகிறேன். எனவே இது குறித்த வடிவத்தில் ஏதாவது குறை இருக்குமாயின், வாசகர்கள் என்னை மன்னித்து இதிலுள்ள விடயங்களை மட்டும் கவனத்தில் எடுக்குமாறு வேண்டுகிறேன்.

* * *

அம்பாறை மாவட்டத்தில் தமது மனித உழைப்பை வழங்குவதற்கென கிளிநொச்சி, வவுனியா பகுதியைச் சேர்ந்த ஆசிரியர்கள், ஆசிரிய வழிகாட்டுநர் மற்றும் கல்வித் துறை சார்ந்த 60 பேர் கடந்த 30 ஆம் திகதி அன்று புறப்பட்டனர். தமிழ்த் தேசியத்தின் ஒரு உணர்வின் துடிப்பாகவே இந்தப் பயணத்தை என்னால் உணரமுடிந்தது. கிளிநொச்சியில் இருந்து புறப்பட்டதும் மலையகத்தில் இருந்து வந்த பல நிவாரணவாகனங்கள் எதிர்ப்பட்டன. "அலையழித்த மக்களுக்கு மலைவாழ் மக்களின் உதவி" என அந்த வாகனங்களில வாசகங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. புளியங்குளத்தைச் சென்றடையும் வரை இவ்வாறான பல வாகனங்களைக் காணமுடிந்தது. தந்தை செல்வாவின் மறைவின் போதும் அவருக்கு அஞ்சலி செலுத்தத் தமிழீழத்தின் பல பகுதிகளில் இருந்தும், மலையகத்திலிருந்தும் இரவு பகலாக, சாரை சாரையாக வாகனங்கள் வந்ததைப் பரந்தன் சந்தியில் இருந்து பார்த்திருந்தேன். அதன்பின் தமிழ்த தேசியத்தின் வலிமையை எடுத்தி யம்பும் வகையிலான இந்தக் காடசியைக் கண்ணுற்றபோது கண்கள பனித்தன.

வவுனியாவில் நாம் அரசியற் துறைச் செயலகத்தைச் சென்றடைந்தோம். அங்கு புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த மூர்த்தி எம்மைச் சந்தித்தார். வவுனியா வாழ் மக்களால் நிவாரண உதவியாக வழங்கப்பட்ட பொருட்களில், குழந்தைகளுக்குத் தேவையான பால்மா, மருந்துகள் மற்றும் தொற்று நீக்கிகள் என்பனவற்றின் ஒரு தொகுதி நாம் சென்ற பேருந்தில் ஏற்றப்பட்டன. அப்போது மூர்த்தி சொன்ன விடயம் இனம்புரியாத கோபத்தை இலங்கை ஆட்சியாளர்கள் மற்றும் படையினர் மீது ஏற்படுத்தியது. "கொண்டுபோற சாமன்களை ஹபறணையிலையும், வேற இடங்களிலையும் வைச்சுப் பறிக்கிறாங்களாம். அதால மிச்சச் சாமான்களையும், மருந்துகளையும் பாதுகாப்பாகக் கொண்டுபோற ஏற்பாடு செய்து போட்டுத்தான் அனுப்ப வேண்டும்" என அவர் சொன்னார். ஏற்கனவே படையினராலும், சாதாரண உடையில் இருந்து தம்மை அதிகாரிகள என்று இனம்காட்டியவர்களாலும், மலையக மக்கள் முன்னணியினரால் தென் தமிழீழ மக்களுக்கென அனுப்பப்பட்ட உதவிப் பொருட்கள் ஹபறணையில் வைத்துப் பறிமுதல் செய்யப்பட்டதுபற்றி அறிந்திருந்தேன்.

மூர்த்தியின் கூற்றுக்கள் "எத்தனை சுனாமிகள் அடித்தாலும், இவர்களின் மனதில் எத்தகைய மாற்றத்தையும் விளைவிக்கப் போவதில்லை" என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டியது. அங்கே இன்னுமொருவர் இன்னொரு விடயத்தைக் குறிப்பிட்டார். "முல்லைத்தீவில் மக்கள் பட்டினியாகக் கிடக்கிறார்கள் என்று ஜே.வி.பியினர் வவுனியாவில் உதவிப் பொருட்கள் சேகரித்தனர். அவர்களுடன் சில தமிழ் இளைஞர்கள் காணப்பட்டனர். அவர்களிடம் நான் நீங்கள் எங்கே இந்த உதவிப்பொருட்களைக் கொடுக்கப் போகிறீர்களோ அதைச் சொல்லிச் சேகரியுங்கள். முல்லைத் தீவுக்கு என்று சொல்லி மோசடி செய்ய வேண்டாம் என்று அந்த ஜே.வி.பியினரிடம் கூறினேன் என்றார். ஹபறணை விடயமும், வவுனியா விடயமும் ஒன்றைத் தெளிவாக எடுத்துக் காட்டியது. "ஜே.வி.பியினருக்கு வெற்றிகரமாகப் புரட்சியை எவ்வாறு நடத்துவது என்பதும் தெரியாது. புனர்வாழ்வில் நேர்மையாக எப்படி நடந்துகொள்வது என்பதும் தெரியாது.

எமது பயணத்தில் 31.12.2004 அன்று நடந்த ஒரு முக்கியமான விடயத்தைக் குறிப்பிட்டாக வேண்டும். அம்பாறை வழியாகவே (அம்பாறை நகரம் - சிங்களப் பகுதி) நாம் பயணம் மேற்கொள்ள வேண்டியிருந்தது. ஏனெனில், பாதையில் நேராகப் பயணம் செய்யமுடியாதபடி வீதிகள துண்டிக்கப்பட்டிருந்தன. மஹாஓயாவைத்தாண்டிச் சிறிது தூரம் சென்றதும் எமது பேருந்துக்குக் காற்றுப் போய்விட்டது. ஒரு சிறிய மலையில் இருந்த விகாரையொன்றின் முன்பாகப் பேருந்தை நிறுத்திச் சில்லை மாற்றும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தோம். அப்போது பல வாகனங்கள் பதாகைகளைக் கட்டியவாறு, அம்பாறை நகரத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தன. அந்தவேளை அம்பாறை நகரில் இருந்து ஒரு லெறி வந்தது. அதிலும் இவ்வாறே பதாகை கட்டப்பட்டிருநதது. (அரசகரும மொழியில்) முன்னே ஒரு பௌத்த பிக்கு அமர்ந்திருந்தார். அந்தப் பஸ்ஸிலிருந்து ஒரு பொதி விழுந்தது. தொடர்ந்து இன்னொரு வீட்டின் முன்னாலும் ஒரு பொதி விழுந்தது. அப்போது எமது பேருந்திலிருந்து இறங்கியிருந்த ஆசிரியர்கள் சத்தம் போட்டுப் லொறியை நிறுத்தினர். அப்போது தான் கவனித்தோம் லொறியின் பின்னால் இருந்தவர்கள் எதிரே இருந்த வீட்டினருக்குச் சைகை காட்டு வதைத் தொர்ந்து ஒரு சிறுமி வந்து அந்தப்பொதியை எடுத்துச் சென்றார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கெனச் சேகரிக்கப்பட்ட இந்தப் பொருட்களை - எந்தப் பாதிப்புமே அடையாமல் மலைப் பகுதியில் வாழ்ந்த மக்களுக்கு வழங்கும் அநீதியை நேரில் கண்ட போது, இன்னும் சினம் அதிக மாகியது. ஒரு பெரிய சொப்பிங் பைக்குள் பொட்டலம், பொட்டலமாக உலர் உணவுப் பொருட்களும், உடுபுடவைகளும் (புதியன) இருந்தன. பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம்



தமிழினி

மக்களுக்கு உதவாவிட்டால் பரவாயில்லை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டையில் பாதிப்புற்ற சிங்கள மக்களுக்காவது இவற்றை அனுப்பியிருக்கலாமே என எனது மனம் ஏங்கியது.

"யாரோடு நோவேன்? யார்க்கெடுத்துரைப்பேன்?" என எண்ணினேன். இந்த மனச்சுமையை நமது ஈழநாடு வாசகர்களிடம் இறக்கி வைத்துள்ளேன்.

அம்பாறை நகர்ப் பகுதியை வந்தடைந்ததும் திருக்கோயில் - தம்பிலுவில் பகுதிகளில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் தமிழீழ அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினியுடன் தொடர்பு கொண்டார். இந்த உதவிக்குழுவுக்குப் பொறுப்பாகச் சென்ற தமிழீழக் கல்விக் கழகத்தைச் சேர்ந்த ஞானம் அப்போது - தமிழினியுடன் தொலைபேசியில் சில விடயங்களைத் தெளிவாகக் குறிப்பிட்டார்.

"இஞ்ச மழைக்குள்ளதான் நிண்டு வேலை செய்யவேணும். தங்கிறதும் பிரச்சினை, சமைக்கவும், எல்லா வேலையையும் செய்யுறதுக்கும் தயாரான மன நிலையில் எல்லாரையும் வரச் சொல்லுங்கோ"

ஆனால், அக்கரைப்பற்று நோக்கிய எமது பயணத்தை வெள்ளம் அனுமதிக்கவில்லை. அடுத்தநாள் ஏன் அடுத்த வருடம் (01.01.2005) தான் அக்கரைப்பற்றைச் சென்றடைய முடிந்தது.

அங்கே மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் நிவாரணப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். எமது பணியைத் தந்தால், அதை நாம் பொறுப்பெடுத்துச் செய்வோம் என ஆசிரியர்கள் கூறினர். அப்போதுதான் திருக்கோயில் - தம்பிலுவில் பகுதிகளுக்குச செல்ல முடியாதபடி வீதியைக் குறுக்கறுத்து வெள்ளம் ஓடுவதாகவும் மட்டு - அம்பாறை கரையோரப் பகுதி தனித்தனித் துண்டுகளாகத் துண்டிக்கப்பட்டு, தனித் தனித் தீவுகளாக இருப்பதாகவும் மட்டு - அம்பாறைத தளபதிராம் கூறினார்.

(தொடரும்)

# உங்களுக்கு புத்தாண்டு யோகம் எப்படி?

**கன்னி**

கன்னி ராசி அன்பர்களே! நீங்கள் மென்மையான அணுகு முறையைக் கொண்டவர்கள். புதனை ஆட்சி மற்றும் உச்சமாகக் கொண்டவர்கள் என்பதால், உங்களின் வாழ்க்கை எப்போதும் பசுமை நிறைந்ததாகவே இருக்கும், உங்களின் அணுகுமுறை அனைவரையும் கவரும். ஆனாலும், கடந்த சில ஆண்டுகளாக நீங்கள் எண்ணற்ற கஷ்டங்களை அனுபவித்துவந்து இருப்பீர்கள். அதற்குக் காரணம் முக்கிய கிரகங்கள் எதுவும் சாதகமற்ற நிலையில் இருப்பதே. சனிபகவான் 10 ஆம் இடத்தில் இருந்துகொண்டு, நீங்கள் தொடங்கும் எந்த செயலுக்கும் தடைகளைத் தந்து கொண்டிருப்பார். பகைவர்களின் கதியும் உங்களைக் கதிகலங்க வைத்திருக்கும். அடுத்து உங்கள் ராசியில் இருந்து குருபகவான் மந்த நிலையை உருவாக்கியிருப்பார். குடும்பத்தில் அவ்வப்போது பிரச்சினை தலை தூக்கி இருக்கும். ஆனாலும் அவரது பார்வைகளால் ஓரளவு நன்மைகள் கிடைத்து, உங்களை மிகவும் மோசமான நிலைக்குப் போகவிடாமல் பாதுகாத்து இருப்பார். கேது 2 ஆம் இடத்தில் இருந்து பொருள் விரயத்தைத் தந்திருப்பார். ராகு 8 ஆம் இடத்தில் இருந்து உங்களுக்குப் பிரச்சினையைத் தந்திருக்கலாம். இந்த இடர்பாடுகள் அனைத்தும் இந்த ஆண்டுடன் விடைகொடுத்துவிடலாம். முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும் ஆண்டாக இது அமையும்.

பொதுவாக இந்த ஆண்டின் தொடக்கத்தில் மந்தநிலையே நீடிக்கும். ஆனால், கிரகங்களின் மாற்றத்துக்கு ஏற்ப படிப்படியாக நன்மை கிடைக்கும். ராகு-கேது பெயர்ச்சி பெப்ரவரி 28 ஆம் திகதி நிகழ்கிறது. அப்போது ராகு 7 ஆம் இடத்துக்கும், கேது உங்கள் ராசிக்கும் மாறுவார்கள். இவைகூட சிறப்பான பலனைத் தராது. அதன்பின் ராகு உங்கள் முயற்சியில் தடையைத் தந்தாலும், தீயோர் சேர்க்கையில் இருந்து உங்களை மீட்க உதவிபுரிவார். கேது தற்போது இருந்துவரும் அரசுவழி தொந்தரவில் இருந்து விடுவிப்பார். அவரால் எதிரிகளில் தொல்லை அவ்வப்போது வரலாம். அடுத்து சனிப் பெயர்ச்சி ஜூன் மாதம் 27 ஆம் திகதி நடக்கிறது. அதன்பின் சனி 11 ஆம் இடத்துக்குச் செல்கிறார். உங்கள் ராசியிலிருந்து செம்ரெம்பர் 14 ஆம் திகதி விலகி, 2 ஆம் இடத்துக்குச் செல்கிறார். இதுவும் சிறப்பான நிலை. அதன்பின் நீங்கள் எந்த இடையூறையும் முறியடித்து வெற்றி காண்பீர்கள்.

மேற்கண்ட நிலையிலிருந்து பார்க்கும்போது, ஆண்டின் பிற்பகுதி சிறப்பானதாக அமையும் என்பதை உணரலாம். அந்த வகையில் விரிவான பலனைக் காணலாம்.

குருவின் பார்வையால் பொருளாதாரத்தில் ஓரளவு தன்னம்பிக்கை பெறலாம். செலவுகள் அதிகரிக்கும். திருட்டு பயம் ஏற்படும். அரசிடம் இருந்து எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்காது. உங்கள் முயற்சியில் தடைகள் வரலாம். சனி இடமாற்றத்துக்குப் பின்பு நிலைமை சீராகும். அதாவது ஜூன் 27 இற்குப் பின்பு வளம் கொழிக்கும். இதுவரை இருந்துவந்த தடைகள் அகலும். உங்கள்மீது இருந்துவந்த அவமரியாதை, பொல்லாப்பு போன்றவை மறைந்து கௌரவம் மேம்படும்.

## குடும்பம் :-

வீட்டில் கிடைக்கும் நிம்மதியால் வெளியில் இருந்து வரும் சிற்சில பிரச்சினைகள் மனதை வாட்டாது. வீட்டுக் குத் தேவையான வசதிகள் கிடைக்கும். உறவினர்கள் வகையில் இருந்துவந்த பிரச்சினை மார்ச் மாதத்தில் இருந்து விலகி, அனுகூலம் பிறக்கும். திருட்டுப் பயம் மறையும். அதேநேரத்தில் ராகு சாதகமற்ற இடத்தில் தொடர்வதால், குடும்பத்தில் சிறுசிறு மனக்கசப்பு இருந்து வரலாம். எனவே குரு சாதகமான இடத்துக்கு வரும்வரை அதாவது - செப்ரெம்பர்வரை ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் போகவும். அதன்பின் குரு எந்தப் பிரச்சினையையும் முறியடித்து, வீட்டில் அதிக மகிழ்ச்சியைக் கொடுப்பார். தடைப்பட்டு வந்த திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் கைகூடும். வீடு வாங்க யோகம் உண்டு. சிலர் தற்போது உள்ளதைவிட வசதியான வீட்டுக்கு குடிபுகுவர்.

## உத்தியோகம் :-

ஆண்டின் தொடக்கம் பின்னடைவாக இருந்தாலும், கவலை வேண்டாம். மேலதிகாரிகளின் ஆதரவோ, சகஊழியர்களின் ஒத்துழைப்போ இல்லாமல் இருக்கலாம். சிலருக்கு வேலையில் எச்சரிக்கை அறிவிப்புக் கூட வந்திருக்கலாம். குருவின் பார்வையால் அந்தப் பிரச்சினையிலிருந்து மயிரிழையில் நீங்கள் தப்பியிருப்பீர்கள். இந்த இடர்பாடுகள் தொடராது. செப்ரெம்பர் மாதம் வரை சற்றுப் பொறுமையாக இருங்கள். அதன்பின் நிலைமை உங்களுக்குச் சாதகமாக அமையும். உங்களை மேலதிகாரிகள் புரிந்து கொள்வார்கள். கோரிக்கைகள் நிறைவேறும். தற்போது கிடைக்காமல் இருக்கும் பதவியுயர்வு, சம்பள உயர்வு போன்றவை கிடைக்கும். விரும்பிய இடத்துக்கு மாற்றம் கிடைக்கும். சிலர் அதிகார அந்தஸ்துக்கு உயர்த்தப்படுவர்.

## வியாபாரம் :-

உழைப்புக்குத் தகுந்த உயர்வு இல்லாமல் போயிருக்கலாம். ஓரடி ஏறினால், ஒன்றரையடி சறுக்கும் அளவுக்கு உங்கள் முயற்சியில் தடைகள் வந்து உங்களை நிலைகுலையச் செய்திருக்கலாம். இந்தப் பிற்போக்கான அம்சங்கள் ஜூன் மாதத்துக்குப் பிறகு மாறும். தொழிலில் இலாபம் அதிகரிக்கும். புதிய தொழில் அனுகூலத்தைத்தரும். வேலையின்றி இருப்பவர்கள் குறைந்த முதலீட்டில் ஏதாவது சுயதொழிலில் ஈடுபடலாம். அரசிடமிருந்து வந்த தொல்லைகள் மறையும். எதிர்பாராத சலுகைகள் கிடைக்கும். தொழிலதிபர்கள் ஜூன் மாதம் வரை வரவு - செலவுக் கணக்கில் சரியாக வைத்துக் கொள்ள வேண்டும். பகைவர்கள் வகையில் எப்போதும் சற்றுக் கவனம் தேவை. அதேநேரம் அவர்களின் சதியை முறியடிக்கும் வியூகம் அமைக்கவும் நீங்கள் தெரிந்திருப்பீர்கள்.

வழக்கு விவகாரங்கள் சாதகமாகக் கனிந்து வரும். ஆண்டின் பிற்பகுதியில் தீர்ப்பு வந்தால் அது உங்களுக்கு சாதகமான முடிவாக இருக்கும். இழந்த பொருட்கள் மீண்டும் கிடைக்க வாய்ப்புண்டு.

பெண்கள் மிகவும் மகிழ்ச்சியாகக் காணப்படுவீர்கள். அதேநேரம் சிலரது குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடலாம். அது புத்திசாலித்தனம். வேலைக்குச் செல்லும் பெண்கள் ஆண்டின் இறுதியில் உன்னத பலனைப் பெறுவீர்கள். புத்தாடை அணிகலன்கள் வாங்கலாம். உடல் நலன்கள் சிறப்பாக இருக்கும். மனதிலிருந்த வீண் கவலைகள் மறையும். நெருப்புத் தொடர்பான பீதி இனி இருக்காது. மருத்துவச் செலவு வெகுவாகக் குறையும்.

## பரிகாரம் :-

ராகு - கேதுவின் நிலை ஆண்டு முழுவதும் சரியில்லாததால், துர்க்கை வழிபாடு நன்மையைத் தரும். வெள்ளி செவ்வாய்க் கிழமைகளில் பத்திரகாளி அம்மனை வழிபடுங்கள். ராகுகாலப் பூசையில் கலந்து கொள்ளுங்கள். ஜூன்வரை சனி, சாதகமாக இல்லை. அதுவரை சனிக்கிழமைகளில் சனி பகவானை வணங்கவும். கோயிலுக்குச் சென்று வாருங்கள் செப்ரெம்பர் மாதம் வரை குருவுக்குப் பரிகாரம் செய்யுங்கள். சிவன் கோயிலுக்குச் சென்று வாருங்கள்.

# அடுத்துவரும் 50 ஆண்டுகளுக்கு சுனாமி தாக்குதல் இல்லையாம்!

## பூகம்ப ஆய்வு நிறுவன விஞ்ஞானி தகவல்

(போர்ட்பிளேர்)

அடுத்துவரும் 50 ஆண்டுகளுக்கு இந்தியாவை சுனாமி அலைகள் தாக்குவதற்கான வாய்ப்பு இல்லை என்று பூகம்ப ஆய்வு நிறுவன விஞ்ஞானி கூறியுள்ளார்.

ரூர்க்கி நகரில் உள்ள ஐ.ஐ.டியின் பொறியியல் துறையைச் சேர்ந்த டாக்டர் யோகேந்திரசிங் தலைமையிலான குழுவினர் அந்தமானுக்குச் சென்று அங்கு சுனாமி அலைகள் தாக்கியது பற்றியும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட பேரழிவுகள் குறித்தும் ஆய்வு செய்தனர்.

பின்னர் யோகேந்திரசிங் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது -

இதுவரை நாங்கள் மேற்கொண்ட ஆய்வின்படி பார்த்தால் இந்தியாவின் தென்கிழக்கு கடற்கரைப் பகுதியில் இன்னும் 50 முதல் 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு பூகம்பமும் அதன் காரணமாக சுனாமி அலைகளும் ஏற்படுவதற்கான வாய்ப்பு இல்லை. எப்போதாவது சிறிய அளவில் நில அதிர்வுகள் ஏற்படலாம். ஆனால் பெரிய அளவில் பூகம்பம் ஏற்படுவதற்கான வாய்ப்பு இல்லை.

ஒரு பகுதியில் நில நடுக்கம் ஏற்படுமா? என்பதை கடந்தகால நிகழ்வுகளை வைத்து ஓரளவு அனுமானிக்க முடிந்தாலும் ஒருபோதும் உறுதியாகக் கூறி விடமுடியாது. கடந்த 1975 ஆம் ஆண்டு ஒருமுறை சீனாவில் பூகம்பம் ஏற்பட்டது. அப்போது முன்கூட்டியே அதை சரியாக கண்டுபிடித்த சீனா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து பெரும்சேதம் ஏற்படுவதைத் தடுத்தது. ஆனால் அதன்பின் வேறுஎந்த நாடும் பூகம்பம் ஏற்படுவதை முன்கூட்டியே கண்டுபிடிக்கவில்லை.

இப்போது பூகம்பத்தினால் பெரும் நாசமும் உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை. பூகம்பத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட சுனாமி அலைகளால் தான் பலத்தசேதம் ஏற்பட்டுள்ளது. சுனாமி அலைகளைத் தடுத்து நிறுத்த முடியாது. அதைத் தடுக்க உறுதியான எந்தத் திட்டமும் இல்லை. ஹவாய் தீவு பகுதியில் உயரமான சுவர்களை எழுப்பி சுனாமி அலைகளை கட்டுப்படுத்துவதில் ஜப்பான் ஓரளவு வெற்றிபெற்றுள்ளது. உறுதியான தரைப்பகுதியில் வலுவான சுவர்களைக் கட்டுவதன் மூலம் சுனாமியின் தாக்குதலை ஓரளவு கட்டுப்படுத்த முடியுமென யோகேந்திர சிங் கூறினார்.

கடலுக்கடியில் ஏற்படும் பூகம்பத்தால் உருவாகும் சுனாமி அலைகளை தடுக்கமுடியாது. என்றாலும் சுனாமி அலைகள் உருவாகுவதை கண்டுபிடித்து விட்டால் அது கடற்கரையை நெருங்கும்முன் உஷார் நடவடிக்கைகளை எடுத்து உயிர்ச் சேதத்தை தவிர்த்து விடமுடியும்.

சுனாமி அலைகள் ஏற்படுவதை முன்கூட்டியே கண்டுபிடிக்கும் வசதிகள் அமெரிக்கா, ஜப்பான், சீனா போன்ற சில நாடுகளிடம் உள்ளன. தற்போது ஏற்பட்ட சுனாமி அலைகளை அடுத்து இந்தியாவும் ரூ.125 கோடி செலவில் சுனாமி எச்சரிக்கைக் கருவிகளை இந்தியப் பெருங்கடல் பகுதியில் நிறுவ திட்டமிட்டிருப்பதாக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் துறை செயலாளர் ராமமூர்த்தி டெல்கியில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

சுனாமி கண்டுபிடிப்பு கருவிகளை கடலில் அமைப்பது குறித்து இந்த மாதம் நிபுணர்களின் கூட்டத்தை கூட்டி ஆலோசனை நடத்த இருப்பதாகவும் இது தொடர்பாக அமெரிக்க நிபுணர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# றெஜிபோம் பெட்டியிலிருந்த குழந்தை உயிருடன் மீட்கப்பட்ட அதிசயம்!

றெஜிபோம் பெட்டியொன்றில் வைக்கப்பட்டிருந்த மூன்று மாதக் குழந்தையொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட கடற்கொந்தளிப்பினால் அடித்துச்செல்லப்பட்டபோதும் உயிருடன் மீட்கப்பட்ட சம்பவம் கோட்டகொட வாவப் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்தக் குழந்தையின் தாயாரும் அவரது மூத்த சகோதரனும் நீரில் அடித்துச் செல்லப்பட்டதனைக் கண்ட கோட்டகொட களப்பு மோதரவத்தையில் வசிக்கும் ஆர்.நந்தசிறி என்பவர் இது குறித்து தெரிவித்ததாவது. எனது வீட்டிற்கு அருகிலிருந்த கடை இடிந்து வீழ்ந்து சுவர் மாத்திரமே எஞ்சியுள்ளது. அங்கு தங்கியிருந்த தாயும் மகனும் நீரில் அடித்துச்செல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்திற்கு சற்று முன்னர் அந்தத் தாய் தனது 3 மாதக் குழந்தையை றெஜிபோம் பெட்டியொன்றில் வைத்து மூடி அதனை அவரது மூத்த மகன் அணைத்து வைத்திருந்தார். இந்தவேளை தாயும் அந்த மூத்த மகனும் நீரில் அடித்துச்செல்லப்பட குழந்தை இருந்த பெட்டியும் நீரில் அடித்துச் செல்லப்பட்டு பாத்தேகம ரணவிய பிரதேசத்தில் கரையொதுங்கியது.

பின்னர் றெஜிபோம் பெட்டியை கண்டவர்கள் அதனை திறந்து பார்த்தபோது 3 மாதக் குழந்தை அழுது கொண்டிருந்தது. பின்னர் அந்தக் குழந்தை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (தே)

## கொழும்பில் ஓகஸ்ட் மாதம் நடைபெறவிருந்த

# தெற்காசிய விளையாட்டு விழாவை ஒத்திவைக்க ஜனாதிபதி இணக்கம்!

கொழும்பில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவிருந்த பத்தாவது தெற்காசிய விளையாட்டு விழாவை பிற்போடுவதற்கு ஜனாதிபதி சந்திரிகாவின் அனுமதி கிடைத்துள்ளதாக ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

நாட்டில் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அதிக உதவிகளை வழங்குவது அவசியமாகையால் களியாட்ட விழாக்கள் போன்றே விளையாட்டு நிகழ்வுகளையும் இடைநிறுத்தி, அத்றகு செலவு செய்யும் தொகையையும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ வேண்டுமென்பது ஜனாதிபதியின் கருத்தென அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

பத்தாவது தெற்காசிய விளையாட்டு விழாவிற்கு 300 அல்லது 400 மில்லியன் ரூபா அளவிலான தொகையை செலவிடுவதற்கு அரசு தயாரானது. ஆனால், தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள துரதிஷ்டம் காரணமாக இவ்வளவு பெரிய தொகையைச் செலவிடுவதற்கு கடினமானதென விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ஜீவன் குமாரதுங்க தெரிவித்தார்.

எவ்வாறாயினும் தெற்காசிய விளையாட்டு விழாவுக்கு இன்னும் எட்டு மாதங்கள் உள்ளதனால் இந்த விளையாட்டுவிழா தொடர்பாக அவசர தீர்மானம் எதற்கும் வரவேண்டிய தேவை இல்லையென விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார பிரதி அமைச்சர் ஸ்ரீபதி சூரிய ஆராய்ச்சி தெரிவித்தார்.

இது தொடர்பாக இறுதித் தீர்மானத்தை எடுப்பதற்காக அமைச்சர் ஜீவன் குமாரதுங்க ஜனாதிபதியை சந்திக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (தே)

## படகின் அடியில் சிக்கியிருந்தவர் ஒரு வாரத்தின் பின் மீட்கப்பட்டார்

ஒரு வாரமாக படகின் அடியில் சிக்கிக்கிடந்த 24 வய!து மீனவரான இந்தோனேசியாவைச் சேர்ந்த தெட்ஹு சொப்யான் நேற்றுமுன்தினம் உயிருடன் மீட்கப்பட்டார். ஒருவாரமாக பட்டினி கிடந்ததால் களைப்படைந்திருந்த அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அவரது உடலில் நீர்ச்சத்து குறை வடைந்திருந்தது. அவருக்கு குளுக்கோஸ் ஏற்றப்படுகிறது. உடலரீதியில் மட்டுமல்ல மனதளவிலும் அவர் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளார் என்று டொக்டர்கள் தெரிவித்தனர். கடந்த 26 ஆம் திகதி அவர் லம்புலா கடலோரத்தில் இருந்தார். அப்போது சுனாமி ஏற்பட்டதும் படகு அடித்து வந்தபோது அதன் அடியில் சிக்கிக்கொண்டார் என்று நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இனி மேலும் யாரையும் உயிருடன் மீட்பது அரிது என்பதால் மீட்புப் பணிகளை நிறுத்தப்போவதாக இந்தோனேஷியா அறிவித்திருந்த நிலையில் இந்த 24 வயது மீனவர் மீட்கப்பட்டாரென அதிகாரிகள் தெரிவித்தனர்.



நேற்றுமுன்தினம் மாரடைப்பால் மரணமடைந்த இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜே.என்.டிக்சிற்றின் பூதவுடலுக்கு இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் அஞ்சலி செலுத்துவதைக் காணலாம்.

# சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கான நிதியுதவி செய்தோர் விபரம் வருமாறு

கடற் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில், 'நமது ஈழநாடு' நிறுவனம் யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பொதுமக்களிடம் நிவாரண உதவிகளைச் சேர்த்தது இதன்போது பணமாக உதவியோர் விபரம் வருமாறு -

| பெயர் | முகவரி | பெறுமதி(ரூ) |
|---|---|---|
| சுபாஸ் ராணி | பாசையூர் | 100 |
| க.ஜெயமலர் | மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் | 100 |
| நித்தியானந்தன் | மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் | 200 |
| சுரேஷ் | மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் | 300 |
| அப்பன் | மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் | 500 |
| சோதிலிங்கம் | மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் | 1000 |
| சுந்தரலிங்கம் | மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் | 200 |
| சுல்தானம் | மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் | 100 |
| சுதாகரன் | மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் | 100 |
| இரத்தினம் | ---- | 100 |
| நவமோகன் | ---- | 50 |
| ஜெயந்தகுமார் | ---- | 50 |
| மரியதாஸ் | ---- | 50 |
| முத்துராஜா | ---- | 100 |
| மாலின் | ---- | 250 |
| கிருபா | ---- | 100 |
| சன் கொமினிகேசன் | ---- | 200 |
| வே.கந்தையா | ---- | 100 |
| கே.நேசராஜா | ---- | 200 |
| கரன் | ---- | 50 |
| மணி | ---- | 50 |
| சின்னத்தம்பி | ---- | 100 |
| செல்வம் | ---- | 50 |
| தனேஸ் ரெக்ஸ்ரைல் | ---- | 100 |
| செல்வராணி | ---- | 100 |
| கனகராசா | ---- | 500 |
| செ.நடராஜா | ---- | 300 |
| பிலிப்ஸ் | நாவலடி | 500 |
| பிலிப்ஸ் | நாவலடி | 1000 |
| சுந்தரலிங்கம் | ---- | 50 |
| கேசவன் | ---- | 100 |
| இராசம்மா இராஜரட்ணம் | ---- | 100 |
| தவரஞ்சித் | ---- | 100 |
| ச.வின்சன் | ---- | 100 |
| பிலிப்ஸ் | ---- | 500 |
| மூர்த்தி | ---- | 50 |
| ஜே.செல்வராஜா | ---- | 300 |
| ம.சகுந்தலா | ---- | 100 |
| கந்தசாமி | ---- | 100 |
| சி.கனேசன் | ---- | 1000 |
| லிபிசன் | ---- | 500 |
| மகேந்திரம் | ---- | 100 |
| ஜே.நவரட்ணம் | ---- | 200 |
| பொபி ஸ்ரூடியோ | ---- | 100 |
| ஞானரட்ணம் | ---- | 50 |
| அன்டனிதாஸ் | ---- | 40 |
| மாசிலாமணி | 22,மூளாய் ஒழுங்கை, யாழ்ப்பாணம் | 90 |
| புவனேஸ்வரி | ---- | 20 |
| அன்டனிப்பிள்ளை | ---- | 100 |
| கிறிஸ்ரி இராஜநாயகம் | ---- | 1000 |
| புஸ்பராணி | ---- | 50 |
| ரகுநாதன் | மானிப்பாய் வீதி | 100 |
| கவின்ரன் | ---- | 100 |
| வீரசிங்கம் | ---- | 100 |
| வீரசிங்கம் | ---- | 100 |
| தங்கலஷ்மி | ---- | 100 |
| தனலஷ்மி | ---- | 100 |
| ஜெயராணி | மானிப்பாய் வீதி | 100 |
| க.கந்தசாமி | ஆனைக்கோட்டை, நவாலி | 500 |
| அருட்செல்வி | ---- | 100 |
| தவம் | நவாலி | 100 |
| டொக்டர் மரியதாஸ் | நவாலி | 500 |
| தர்மராஜா | நவாலி | 200 |
| சாள்ஸ் | மத்தியூஸ் வீதி | 200 |
| நி.எமல்டா | மத்தியூஸ் வீதி | 100 |
| அ.தனபாலு | பழைய பூங்கா வீதி | 200 |
| ஜெயலக்சன் | மத்தியூஸ் வீதி | 100 |
| எஸ்.சுதா | மத்தியூஸ் வீதி | 100 |
| லீலாமலர் | மத்தியூஸ் வீதி | 200 |
| மொறிஸ் | மத்தியூஸ் வீதி | 200 |
| செல்வரட்ணம் | மத்தியூஸ் வீதி | 100 |
| ஜெயராசா | குருசல வீதி | 50 |
| பரமராஜா | குருசல வீதி | 100 |
| அன்ரன் | ---- | 100 |
| செபஸ்ரியான்பிள்ளை | குருசல வீதி | 100 |
| செ.ரூபன் | குருசல வீதி | 100 |
| செ.அமலசீலி | குருசல வீதி | 50 |
| சூரியன் | குருநகர் | 50 |
| ப.ஜெயரட்ணம் | குருநகர் | 100 |
| ரயூலா | குருநகர் | 100 |
| ஜேசுதாசன் | குருநகர் | 100 |
| லூயிஸ் | குருநகர் | 200 |
| ஜே.அன்டனி | குருநகர் | 200 |
| இ.சவரிமுத்து | குருநகர் | 100 |
| சிலுவை ஜெராட் | குருநகர் | 100 |
| செல்வி | குருநகர் | 10 |
| பயஸ் ஜேசுதாசன் | குருநகர் | 100 |
| யூலியல் | குருநகர் | 50 |
| யோகம் சூசைதாசன் | குருநகர் | 100 |
| - | குருநகர் | 100 |
| என்.லோகநாதன் | குருநகர் | 100 |
| எஸ்.லொஜின்றன் | குருநகர் | 100 |
| தேவதாஸ் டிக்ஷன் | குருநகர் | 100 |
| யேசுநாயகம் | குருநகர் | 100 |

(நாளை தொடரும்)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அமெரிக்கத் துருப்புக்கள் தொடர்ந்து தரையிறக்கம்!



(கொழும்பு)

நிவாரணப் பணிகளுக்கென கொழும்பு வந்துள்ள அமெரிக்கப் படைகளின் இரண்டு பிளக் ஹோக் ஹெலிகள் நேற்று உதவிப் பணிகளில் ஈடுபட ஆரம்பித்துள்ளன.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த அமெரிக்கத் தூதரக அதிகாரி கிறிஸ் லோங் - அமெரிக்க இராணுவ விமானங்கள் தனியே மனிதாபிமானப் பணிகளுக்கே பயன்படுத்தப்படுமெனக் குறிப்பிட்டார். மேலதிக தகவல்கள் எதையும் அவர் வழங்க மறுத்துவிட்டார்.

இதேவேளை - ஹெலிகொப்டர்கள் மூலம் காலிக்குச் சென்றுள்ள அமெரிக்கப் படையினர் தமது நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்

கொழும்பு வந்துள்ள அமெரிக்கப் படையினர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு அருகே தற்காலிக முகாம் ஒன்றை அமைத்துள்ளனர்.

விமானம் மூலமாக நேற்று முன்தினம் 42 அமெரிக்கப் படையினர் கொழும்பு வந்திருந்தனர். இதன்பின்னர் மேலும் படையினர் வந்துள்ளனர். தற்போது 200 வரையிலான அமெரிக்கப் படையினர் இலங்கைக்கு வந்துள்ளனர்.

நேற்று விமானங்கள் மூலமாக அமெரிக்கப் படையினருக்கான பொருட்கள் மற்றும் ஹெலிகொப்டர்கள் எடுத்துவரப்பட்டன.

கட்டுநாயக்காவில் அமைக்கப்பட்ட புதிய முகாமுக்குத் தேவையான பொருட்களுடன் நேற்றுப் பிற்பகல் 2.25 மணிக்கு வந்த கி-5 விமானத்தில் 30 அமெரிக்கத் துருப்புக்கள் வந்தனர்.

பிற்பகல் 3.40 மணிக்கு வந்த மேலும் ஒரு கி-5 விமானத்தில் படையினருக்கான பெருமளவு பொருட்களும், பிளக்ஹோக் ஹெலிகள் இரண்டும் எடுத்துவரப்பட்டன.

பிற்பகல் 5.51 மணிக்கு மேலும் பல அமெரிக்கப் படையினர் கட்டுநாயக்கா வந்தடைந்தனர். நேற்று மட்டும் 70 அமெரிக்கத் துருப்புக்கள் கொழும்பு வந்ததாகத் தெரியவருகிறது.

இதேசமயம் - இலங்கையில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக அனுப்பப்பட்ட அமெரிக்க மரைன் படைகளின் தளபதி கொழும்பில் நேற்று நடத்தவிருந்த செய்தியாளர் மாநாடு திடீரென ரத்துச் செய்யப்பட்டது.

அமெரிக்க நிலையத்தில் நேற்று பிற்பகல் நடைபெறவிருந்த இந்த மாநாடு ரத்துச் செய்யப்பட்டதற்கான காரணம் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

# கிணற்றிலிருந்து சடலம் கரணவாயில் மீட்பு!

அடித்து படுகொலை செய்யப்பட்ட பின்னர் தோட்டக் கிணறு ஒன்றினுள் போடப்பட்டதாகக் கூறப்படும் முதியவர் ஒருவரின் சடலம் கரவெட்டிப் பகுதியில் மீட்கப்பட்டுள்ளது.

கரணவாய் தெற்கு அண்ணா சிலையடியைச் சேர்ந்த குமார் சின்னத்துரை (வயது 58) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

நேற்றுமுன்தினம் மாலை வீட்டை விட்டு வெளியேறிய இவர் அன்றையதினம் இரவு வீட்டுக்கு திரும்பி வரவில்லை. இவரைக் காணாது தேடித் திரிந்த வேளை கரவெட்டி மூத்த விநாயகர் கோவிலுக்கு சமீபமாக உள்ள தோட்டப் பகுதியில் மதில் ஒன்றில் இவரது சைக்கிள் நிறுத்தப்பட்டிருந்தது.

இதன்பின்னர் அப்பகுதியில் தேடியவேளை கிணற்றினுள் சடலம் இருப்பது கண்டுபிடிக்கப்படடது.

சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டதையடுத்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து கிணற்றிலிருந்து சடலத்தை மீட்டு மந்திகை வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

மருத்துவ பரிசோதனையை மேற்கொண்ட மாவட்ட வைத்திய அதிகாரி சி.கதிரவேற்பிள்ளை சடலத்தின் தலைப் பகுதியில் அடிகாயம் இருப்பதாகத் தெரிவித்தார்.

இவர் கொலை செய்யப்பட்ட பின்னர் கிணற்றினுள் போடப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை நடத்தி அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் நெல்லியடி பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (12,14)

## அரசியற்....

னர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு பணி செய்வதற்கு முன்வரும் பொது அமைப்புக்களும் தனிநபர்களும் அருகிலுள்ள அரசியற்துறை அலுவலகத்துடன் தொடர்புகொண்டு வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்துக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

## உதவிகளைப் பகிரும் கட்டமைப்பை...

நாங்கள் மேற்கொண்டு வருகிறோம். அதற்கு மாவட்ட மட்டத்தில் செயலணிக் குழுக்களை உருவாக்கியிருக்கிறோம்.

இந்தச் செயலணிக் குழுக்களுக்கு சர்வதேச நிறுவனங்கள், சர்வதேச சமூகம் என்பன சில ஆரம்ப கட்ட உதவிகளைச் செய்திருக்கின்றன. அடுத்த கட்டமாக எமது மக்களின் மறுவாழ்வுப் பணிகளை முன்னெடுக்க, சர்வதேச உதவிகளை எமது மக்களுக்கும் சரியான முறையில் பகிர்ந்தளிக்கக் கூடிய கட்டமைப்புக்களைத் தோற்றுவிக்க வேண்டும்.

அதுவே எமது தலைமைப் பீடத்தின் கற்பனையாக இருக்கின்றது என்பதையும் நாங்கள் அவர்களுக்கு வலியுறுத்தியுள்ளோம். அதற்கான ஏற்பாடுகள் பற்றி இலங்கை அரசாங்கத்தோடும் சர்வதேச சமூகத்தோடும் விரைந்து பேசி இது பற்றிய விளக்கங்களை தெளிவுகளை ஏற்படுத்தும்படி கூறியுள்ளோம்.

*கேள்வி:* நோர்வே அரசாங்கம் எத்தனை மில்லியன் ரூபாவை இலங்கைக்கு வழங்கியுள்ளது?

*பதில்:* இதுவரை இலங்கைக்கான உதவிகளை எந்தெந்த நாடுகள் எவ்வளவு வழங்கியுள்ளன என்பது இன்னும் தெளிவாகத் தெரிவிக்கப்படவில்லை. ஆனால், இலங்கைத் தீவில் எமது தாயகப் பிரதேசம்தான் இயற்கை அனர்த்தத்தில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ஆகவே, அந்த அடிப்படையில் சர்வதேச சமூகம் தனது உதவிகளை சரியான முறையில் பகிர்ந்தளிக்க வேண்டும்.

அது எங்களுடைய மக்களுக்கு சரியான முறையில் சேரவேண்டும் என்பது பற்றிய விடயங்களைத்தான் வலியுறுத்தியிருக்கின்றோம். ஏற்கனவே இந்த அனர்த்தம் ஏற்பட்டு மூன்று, நான்கு நாட்களும் இங்குள்ள உள்ளூர் வளங்களும் விடுதலைப் புலிகளின் கட்டமைப்புக்களும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் போன்ற தொண்டர் ஸ்தாபனங்களுமே இந்த சுமையைத் தாங்கி நின்றன. ஆகவே, இனி சர்வதேச நிறுவனங்கள் இதற்கான உதவிகளை பெருமளவில் திருப்ப வேண்டும் என்பதை இந்தச் சந்திப்பில் மீண்டும் வலியுறுத்தியுள்ளோம்.

*கேள்வி:* நோர்வேத் தூதுவர் 170 மில்லியன் அமெரிக்க டொலர்களை தங்களுடைய அரசாங்கம் வழங்கும் என்று கூறியுள்ளார்?

*பதில்:* நான் நினைக்கிறேன். இது ஒட்டுமொத்தமான உதவியாகத்தான் இருக்கும். அதில் எங்களுடைய தாயகப் பிரதேசத்துக்கு எவ்வளவு ஒதுக்கப்படும் என்பது பற்றி அவர்கள் தீர்மானிக்கவில்லை.

திட்டமிடலுக்கும் அபிவிருத்திக்குமான எமது செயலகம் ஒரு தேவை மதிப்பீட்டை செய்து கொண்டிருக்கிறது. அது சம்பந்தமான வேலைத் திட்டங்கள் முடிந்தவுடன் நாங்கள் சர்வதேச சமூகத்துக்கு அதைக் கையளிக்கவுள்ளோம். ஆகவே, சர்வதேச சமூகம் எங்களுடைய மக்களுக்கான உதவிகளை சரியான முறையில் சென்றடையக் கூடிய வகையில் உதவி புரியவேண்டும்.

*கேள்வி:* மக்களுக்கு அரசாங்கத்திடம் இருந்து என்ன எதிர்பார்க்கிறீர்கள்?

*பதில்:* நாங்கள் இப்போது மக்களுக்கான மனிதாபிமான உதவிகளைத்தான் எல்லோரிடம் கோரியிருக்கின்றோம். அனைவரும் மனமுவந்து இந்த மனிதாபிமான நெருக்கடிக்கு, பெரிய பேரழிவு ஏற்பட்ட சூழலில் உதவ வேண்டும் என்பது தான் நாம் எல்லோரிடமும் முன்வைக்கும் பொதுவான கோரிக்கை.

*கேள்வி:* வருகின்ற உதவிகள் தடுக்கப்படுகின்றன என்பது பற்றி?

பதில்: இது ஒரு முக்கியமான விடயம். நாம் ஒரு அறிக்கையை வெளியிடவுள்ளோம். தெற்கில் இனவாத சக்திகளும் ஊடகங்களும் தவறான பிரசாரங்களைச் செய்து வருகின்றன. எமது தாயகப் பகுதிக்குள் வரும் பொருட்கள் கடத்தப்படுவதாகவும் பறிக்கப்படுவதாகவும் சரியாகச் சென்றடையவில்லை என்றும் விடுதலைப் புலிகள் சில முகாம்களை எரித்ததாகவும் பல தவறான பிரசாரங்கள் தெற்கில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது.

எமது தாயகப் பிரதேசத்தில் மிகவும் கட்டுக் கோப்பாகவும் மிகுந்த ஒழுங்கமைப்போடும் மனிதாபிமானப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இதை சீர்குலைக்கும் நோக்கோடுதான் திட்டமிட்ட ரீதியில் தெற்கிலே இருந்து இந்த பிரசாரத்தை கட்டவிழ்த்து விட்டிருக்கின்றனர்.

சர்வதேச ஊடகங்கள், உள்ளூர் ஊடகங்கள் அனைத்திற்கும் நாம் பகிரங்க வேண்டுகோள் ஒன்றை விடுக்கின்றோம். நேரடியாக வந்து பார்த்து நீங்கள் உண்மைகளை வெளியிடுங்கள். உண்மைக்குப் புறம்பான செய்திகளை பரப்புகின்ற இந்த சக்திகளின் செய்திகளை நம்புவது மனிதாபிமான நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருக்கும் மக்களை மிக மோசமாகப் பாதிக்கும். ஆகவே, பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களை தாக்குகின்ற இப்படியான செயற்பாடுகளை தவிர்க்குமாறு அவர்களிடம் கேட்டுக் கொள்கின்றோம் எனத் தெரிவித்தார்.

## நிவாரணப்...

நாடு முழுவதுமுள்ள 653 நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள 7 லட்சத்து 20 ஆயிரத்து 572 மக்களுக்கான உதவி, நிவாரண, புனர்வாழ்வுப் பணிகள் அனைத்தும் நேற்றுமுன்தினம் தொடக்கம் கூட்டுப்படைத் தலைமையகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி சந்திரிகாவின் விசேட உத்தரவின்படி - இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இராணுவ, கடற்படை, விமானப்படையினருக்கு கூட்டுப் படைகளின் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி பொறுப்பாக இருப்பார்.

வடக்கு - கிழக்கு உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலும் முப்படையினரே இந்தப் பணிகளுக்குப் பொறுப்பாக இருப்பார் என்று அறிவிக்கப்பட்டிருப்பதுடன் - சுனாமியால் பாதிக்கப்பட்ட 12 மாவட்டங்களுக்கும் இணைப்பதிகாரிகளாக படையதிகாரிகளே நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி அம்பாறையில் கேணல என்.ஏ.ஜே.சி.டயஸ், மட்டக்களப்பில் பிரிகேடியர் விஜயகுணவர்த்தன, கொழும்பில் பிரிகேடியர் சந்திரவன்ச, காலியில் றியர் அட்மிரல் தென்னக்கோன், கம்பஹாவில் கப்டன் ஜெயவர்த்தன, அம்பாந்தோட்டையில் கொமடோர் சமரதுங்க, யாழ்ப்பாணத்தில் மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், களுத்துறையில் றியர் அட்மிரல் கரன்னகொட, மாத்தறையில் மேஜர் ஜெனரல் குலதுங்க, புத்தளத்தில் கேணல் குணரத்ன, திருகோணமலையில் மேஜர் ஜெனரல் பாலசூரிய, வவுனியாவில் மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க ஆகியோர் இணைப்பதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உதவிப் பணிகளில் விடுதலைப் புலிகளும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் தீவிரமாக ஈடுபட்டுள்ள நிலையில் - புலிகளை இந்தப் பணிகளில இருந்து ஓரங்கட்டுவதற்கே இந்த நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொண்டிருப்பதாகக் கருதப்படுகிறது.

புலிகளுடன் இணைந்து நிவாரணப் பணிகளை மேற்கொள்ளத் தயார் என ஜனாதிபதி சந்திரிகா அறிவித்துள்ளபோதும், இருதரப்புக்கும் இடையில் முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் நடவடிக்கையில் இறங்கியிருப்பது சந்தேகங்களைக் கிளப்பிவிட்டுள்ளது.

## சுனாமி...

யின் அனர்த்த நிவாரணக் குழுக்களை தமது கட்டுப்பாட்டுப் பகுதிகள் ஊடாகப் பயணம் செய்வதற்கு விடுதலைப் புலிகள் அனுமதித்துள்ளார்கள்.

தற்போது விடுதலைப் புலிகளுகக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் பரஸ்பர புரிந்துணர்வு நிலவிவருகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தைச் சாதகமாகப் பயன்படுத்தி நாட்டில் நீண்டகாலமாக நிலவிவரும் இனமுரண்பாட்டைத் தீர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளை இருதரப்பினரும் மேற்கொள்ளவேண்டும் எனத் தெரிவித்தார்.

## பிரிட்டிஷ்....

தெற்கு கரையோரப் பகுதிகளில் ஏற்பட்ட அழிவுகளை மதிப்பீடு செய்தது.

இந்த ஹெலிகொப்டரில் இலங்கையில் உதவிப் பணிகளை மேற்கொள்வதற்காக அனுப்பப்பட்டிருக்கும் படைகளுக்கான தளபதி கேணல் கோடன் மெசெஞ்சர் மற்றும் இராணுவப் பொறியியலாளர், மற்றும் பல கடற்படையினரும் பயணம் செய்து அழிவுகளைப் பார்வையிடடனர்.

கொழும்பு வந்துள்ள பிரிட்டிஷ் போர்க் கப்பலான சதமின் கட்டளை அதிகாரியாக கப்டன் ஸ்ரிவ் கிக் இருக்கும் அதேவேளை - இந்தக் கப்பலில் மேலும் 250 மாலுமிகள் வந்திருப்பதாகவும் தெரியவருகிறது.

## உதவிப்....

பெற்றுக்கொண்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கடும் துன்பத்திற்குள்ளாகியுள்ள மக்களுக்காக இத்தாலிய அரசு வழங்கிய இந்தப் பொருட்களுக்காக அந்த அரசாங்கத்திற்கும் இத்தாலிய மக்களுக்கும் தனது நன்றியைத் தெரிவித்தார்.

அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மீட்புப்பணிகள் மற்றும் நிவாரண உதவிகள் என்பன எவ்வாறு மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென்பதனை அரசியற்துறைப் பொறுப்பாளர் இத்தாலிய அதிகாரிகளுக்கு எடுத்து விளக்கினார்.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட இடங்களையும் நலன் புரிநிலையங்களையும் இந்தக்குழுவினர் சென்று பார்வையிட்டனர்.

A/L 2006
ACCOUNTING
Balavasan
B.B.A.(F.M.Spl.)
Sat,Sun 3-4
ஆரம்பம்:
08 ஜனவரி 2005 - சனி 3.00 மணி
BEACON
வெலிங்டன் சந்தியருகில்

D.C.M.
வணிக, முகாமைத்துவப் பட்டப்படிப்புக் கல்லூரி
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்,
(ஆணைப்பந்தி - இந்து குருகுலம் முன்பாக)
A/L - 2007
ஆரம்பம்:
09 ஜனவரி 2005 - ஞாயிறு காலை 8.00 மணி
பொருளியல் - வரதராஜன்
கணக்கீடு - பாலவாசன்
வணிகக்கல்வி - உமாகாந்த்
தமிழ் - தமிழீந்திரன்
இந்துநாகரீகம் - ஸ்ரீஸ்
அளவையியல் - சுதன்
புவியியல் - குமரன்
ஆங்கிலம் - நிஷாந்தன்
இயக்குனர்
S. வரதராஜன்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 05.01.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.